1447

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

1447
4-56
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MADRAS

...அஹோபிலமடம் 41வது பட்டம் ஸ்ரீ அழகிய சிங்கர் ஸ்ரீவண்சட
...ஸ்ரீலக்ஷ்மீ நரஸிம்ஹ சடகோபயதீந்திரமஹாதேசிகன்.

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம் பக்கம்

1. ஸம்பாதகரின் குறிப்புக்கள் 314
2. ஓர் ஸந்தேஹம் 318
[ஸ்ரீ. உப. V. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமி, பம்பாய்.]
3. 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம் 319
4. இரண்டு தேசிகரத்நங்கள் 321
[ஸ்ரீ. உப. திருப்பூந்துருத்தி, V. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, மாம்பலம்.]
5. ஹம்ஸஸந்தேசம் 326
[ஸ்ரீ. உப. A. V. கோபாலாச்சார்யஸ்வாமி, M.A.,B.L. அட்வோகேட், திருச்சி.]
6. மஹாவீரவைபவம் 329
[ஸ்ரீ. உப. வித்வான், பாதூர், புராணம், ஸரளகவி, ராகவாசார்யஸ்வாமி, வ்யாகரணாத்யாபகர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]
7. ராமாநுசனை அநுபவிக்கும் ராமாநுசன் 333
[ஸ்ரீ. உப. கனபாடி. வேதரத்னம், K. V. ஸந்தானகோபாலாசார்யஸ்வாமி, வேதபண்டிட், ஸம்ஸ்க்ருத கலாசாலை, ஹைதராபாத்.]

-:ஓர் விஜ்ஞாபனம்:-

நமது சந்தாதாரர்கள் அநேகமாக எல்லோரும் அவரவர்கள் சந்தாதொகையை அனுப்பிவிட்டார்கள். அவர்களுக்கு எங்கள் நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறோம். மிகச் சிலரே சந்தாபாக்கியுள்ளவர்கள். அவர்களுக்கும் தபால் போட்டிருக்கின்றோம். அவர்களும் கூடிய சீக்கிரத்தில் பாக்கியை அனுப்பிவிடுவார்கள் என்று நம்புகின்றோம். பணமோ பதிலோ அனுப்பாதவர்களுக்கு ஜனவரி முதற்கொண்டு பத்ரிகை அனுப்பப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

மானேஜர்

1447
4-56

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸ்ரீ அழகியசிங்கர் நியமனத்தால்
மாதந்தோறும் ப்ரசுரமாகும்
ஸ்ரீ அஹோபிலமடத்துப் பத்திரிகை

[மன்மத - துர்முகி]

ஸம்புடம் - 15

210735

ஸம்பாதகர்
ஸ்ரீ. உப. T. ராமஸ்வாமி ஐயங்கார், M.A., L.T.

ப்ரசுரிக்குமிடம்
30. பனகல் தெரு, திருவுள்ளூர்.

திருவுள்ளூர் ஸ்ரீ மாலோல முத்ராலயத்தில்
அச்சிடப்பட்டது.

1956

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா - ஸம்புடம் 15.

விஷய ஸூசிகை

[அகாராதி]

விஷயம்	பக்கம்
அடியேன் கண்ட தத்க்ரது ந்யாயம் [ஸ்ரீ. உப. புரிசை, நடாதூர் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, திருவுள்ளூர்]	57
அமலனாதிபிரானும் அந்தர்ஜ்யோதிஸ்ஸும் [ஸ்ரீ. உப. மேல்பாக்கம் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, மதுராந்தகம்.]	267
அருள் மாரியை யணைந்த ஆநந்தக்கூத்தன் [ஸ்ரீ. உப. ஈ. தே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, திருவஹீந்திரபுரம்.]	68
ஆசார்ய மஹிமை [ஸ்ரீ. உப. வேளியநல்லூர் வரதராஜ ஐயங்கார் ஸ்வாமி, வெம்பாக்கம்.]	66
ஆழ்வார்தம் க்ருபையான ஹம்ஸமுத்திரை வாழியே [ஸ்ரீ. உப. தி. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, மதுராந்தகம்.]	47
இரண்டு தேசிகரத்னங்கள் [ஸ்ரீ. உப. திருப்பூந்துருத்தி க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, மாம்பலம்.]	321
ஓர் ஸந்தேஹம் [ஸ்ரீ. உப. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்ஸ்வாமி, பம்பாய்.]	318
கண்ணனுக்கே யாமது காமம் [ஸ்ரீ. உப. கொடியாலம் துரைஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, மாம்பலம்.]	263
கண்ணனாக வந்த வேங்கடவன் [ஸ்ரீ. உப. பாதூர், தூப்புல் ராமபத்ராசார்ய ஸ்வாமி, திருவுள்ளூர்.]	232
கண்ணனும் கீதையும் [ஸ்ரீ. உப. மதுராந்தகம் தி. ஈ. வீரராகவாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.]	211, 244
கத்யத்ரயமும் ஸ்ரீ தேசிகனும் [ஸ்ரீ. உப. அத்தி க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, மதுராந்தகம்.]	284
கன்னியீன்ற குருமணிகள் [ஸ்ரீ. உப. மதுராந்தகம் தி. ஈ. வீரராகவாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.]	272
கேள்வியும் பதிலும் [ஸ்ரீ. உப. வில்லிவலம் நாராயணாசார்ய ஸ்வாமி, மதுராந்தகம்.]	260
சீவரத்தில் சிங்கவேழ் குன்றத்தான் [ஸ்ரீ. உப. வடுவூர் ராமபத்ராசார்ய ஸ்வாமி, ஸ்ரீ அஹோபிலமடம்.]	78
செய்திகள்	33, 49, 106, 196, 216, 228, 259, 298

விஷயம் — பக்கம்

சௌசம் — 42, 61, 86, 185
[ஸ்ரீ. உப. மே. துரைஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, சென்னை.]

திறலனுமன் தெரிந்துரைத்த அடையாளம் — 123, 150, 183
[ஸ்ரீ. உப. ஓரகடம் கே. ஸுதர்சநாசார்ய ஸ்வாமி, அவளூர்.]

த்ரியாமாயா: என்கிற ச்லோகத்தின் அர்த்தம் — 505
[ஸ்ரீ. உப. வேளியநல்லூர் ஸ்ரீநிவாஸதாதாசார்ய ஸ்வாமி, காஞ்சீபுரம்.]

திருவஷ்டாக்ஷரத்தைப் புகழும் திருமங்கையர்கோன் — 236
[ஸ்ரீ. உப. ஈ. தே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, திருவஹீந்திரபுரம்.]

தேச உலகரக்ஷை — 89, 115, 141, 175
[ஸ்ரீ. உப. திருவரங்கம் திருமலைதாதாசார்ய ஸ்வாமி, திருப்பதி.]

நம்மாழ்வாரும் நம்முடை நம்பெருமானும் — 281
[ஸ்ரீ. உப. பாதூர் ராகவாசார்ய ஸ்வாமி, மதுராந்தகம்.]

நல்லோர் ஸந்திப்பு — 207, 229
[ஸ்ரீ. உப. புரிசை, நடாதூர் கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி, திருவுள்ளூர்.]

நற்போது போக்கு — 63
[ஸ்ரீ. உப. ஓரகடம் கே. ஸுதர்சநாசார்ய ஸ்வாமி, அவளூர்.]

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம் — 25, 40, 74, 101, 127, 154, 191, 221, 253, 287, 309, 319

பஞ்சாங்கஸங்க்ரஹம் — 19, 77, 132, 198, 312

பட்டாபிஷேக ஸ்ரீமுகம் — 20
[ஸ்ரீ. உப. தோட்டாலம் வேணுகோபாலாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.]

பண்டை காலத்திய குருகுலமுறை — 238
[ஸ்ரீ. உப. அத்தி கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி, மதுராந்தகம்.]

பக்ஷிண்யாசௌச நிர்ணயம் — 197
[ஸ்ரீ. உப. தி. ஈ. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, மதுராந்தகம்.]

பாக்யபுரியில் ஸ்ரீ மாலோல வித்வத்ஸதஸ் — 217
[ஸ்ரீ. உப. பாதூர், தூப்புல் ராமபத்ராசார்ய ஸ்வாமி, திருவுள்ளூர்.]

புத்தகவிமர்சம் (ஸஞ்சிகை 1, 4) அட்டை பக்கம் — 3

பெரியார்க்காட்பட்டக்கால் பெறாத பயன் பெறும் — 248
[ஸ்ரீ. உப. முக்கூர் ராஜகோபாலாசார்ய ஸ்வாமி, ஸ்ரீஅஹோபிலமடம்.]

பெரியோர்கள் பக்கலில் — 307
[ஸ்ரீ. உப. வில்லிவலம் நாராயணாசார்ய ஸ்வாமி, மதுராந்தகம்.]

மங்கைநல்லார் மனோபாவத்தில் விஷ்ணுசித்தன் — 172
[ஸ்ரீ. உப. ஈ. தே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, திருவஹீந்திரபுரம்.]

மஹான்களின் மஹிமை — 241
[ஸ்ரீ. உப. வேளியநல்லூர் வரதராஜ ஐயங்கார் ஸ்வாமி, வெம்பாக்கம்.]

விஷயம் பக்கம்

மஹாவீரவைபவம் 9, 37, 53, 97, 111, 157, 179, 303, 329
[ஸ்ரீ. உப. பாதூர் ராகவாசார்ய ஸ்வாமி, மதுராந்தகம்.]

யாருக்கு நமஸ்காரம் 214
[ஸ்ரீ. உப. வில்லிவலம் நாராயணாசார்ய ஸ்வாமி, மதுராந்தகம்.]

ராமாநுஜனை யநுபவிக்கும் ராமாநுஜன் 333
[ஸ்ரீ. உப. கே. வி. ஸந்தானகோபாலாசார்ய ஸ்வாமி, ஹைதராபாத்]

வாழித்திருநாமச்சிறப்பு 276
[ஸ்ரீ. உப. ஒரகடம் கே. ஸுதர்சநாசார்ய ஸ்வாமி, அவளூர்.]

விசிஷ்டாத்வைதமும் அப்பய்யதீக்ஷிதரும் 21
[ஸ்ரீ. உப. கரூர் நாராயண ஐயங்கார் ஸ்வாமி, கரூர்.]

ஸ்ரீ அழகியசிங்கரின் தேவப்பெருமாள் மங்களாசாஸனம் 70
[ஸ்ரீ. உப. தையார், ஜோஸ்யம், மாடபூஷி ரங்காசார்ய ஸ்வாமி,
ஸ்ரீகார்யம், ஸ்ரீ அஹோபிலமடம்.]

ஸ்ரீ தில்லஸ்தானம் ஸ்வாமி 130
[ஸ்ரீ. உப. டி. எஸ். சேஷாத்ரி ஐயங்கார் ஸ்வாமி, தில்லஸ்தானம்.]

ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்த முமுக்ஷு யார்? 301
[ஸ்ரீ. உப. உத்தமூர் வீரராகவாசார்ய ஸ்வாமி. சென்னை.]

ஸ்ரீ தேசிகப்ரபந்தம் 145
[ஸ்ரீ. உப. திருப்பூந்துருத்தி வி. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, மாம்பலம்.]

ஸ்ரீ தேசிகனும் பாதுகாஸஹஸ்ரமும் 22
[ஸ்ரீ. உப. கே. ஆர். ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி.]

ஸ்ரீமந்நாதமுனிவம்சத்தில் பகவானுக்கு ஆதரம் 32
[ஸ்ரீ. உப. வேளியநல்லூர் ஸ்ரீநிவாஸதாதாசார்ய ஸ்வாமி, காஞ்சீபுரம்.]

ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதயம் 6, 35, 57, 93, 119, 161
[ஸ்ரீ. உப. ஏ. வி. கோபாலாசார்ய ஸ்வாமி, திருச்சி.]

ஸ்ரீஸன்னிதியில் நடக்கும் பகவத்விஷய காலக்ஷேபம் 291
[ஸ்ரீ. உப. சேஷாத்ரியாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ அஹோபிலமடம்.]

ஸம்சயபரிஹாரம் 105
[ஸ்ரீ. உப. வேளியநல்லூர் ஸ்ரீநிவாஸதாதாசார்ய ஸ்வாமி, காஞ்சீபுரம்.]

ஸம்பாதகரின் குறிப்புக்கள் 2, 30, 46, 82, 108, 138, 168, 200, 226, 256, 294, 314

ஹம்ஸஸந்தேசம் 233, 326
[ஸ்ரீ. உப. ஏ. வி. கோபாலாசார்ய ஸ்வாமி, திருச்சி.]

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 15 } துர்முகி ௵ மார்கழி ௴ { ஸஞ்சிகை 12

'𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌮𑍍 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌾𑌰𑍁𑌣𑍋𑌦𑍍𑌧𑍃𑌤𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥

𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌦𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

'त्वयि रक्षति रक्षकैः किमन्यैः त्वयि चारक्षति रक्षकैः किमन्यैः' என்பது ஸ்ரீஸ்வாமியின் திருவாக்கிலிருந்து ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் விஷயமாகவந்த அனுபவம், அதாவது ஸ்ரீந்ருஸிம்ஹன் தன் பக்தர்களைக் காப்பாற்றும்பொழுது, வேறு ரக்ஷகர்களைத் தேடுவதில் அர்த்தமில்லை. அதேபோல் ஸ்ரீந்ருஸிம்ஹனின் நிக்ரஹத்துக்குப் பாத்திரமானவன் வேறு ஒருவராலும் காப்பாற்றப்படக்கூடியவனல்ல. இது ஸ்ரீமத்ராமாயணத்தில் காகாஸுரவ்ருத்தாந்தத்திலிருந்தும் தெரிந்துகொள்ளும் விஷயமேதான்.

சில தினங்களுக்குமுன் தக்ஷிண ரயில்வேயில் அரியலூருக்கு ஸமீபம் ஏற்பட்ட விபத்தில் இம்மாதிரியான பல விஷயங்களை நாம் கேள்விப்படுகிறோம். ஒரே வண்டித் தொடரில் நான்கு வண்டிகள் மட்டில் சேதமடையாமல் மிகுதியாகின என்றால் இதுவும் ஸ்ரீந்ருஸிம்ஹனின் க்ருபையினால் அல்லவா. அதேபோல் சேதமடைந்த வண்டிகளிலேயே உயிர் தப்பியவர்களும், அதிலிருந்து ஸமயத்தில் பின் வண்டிகளுக்கு மாறி உயிர் பிழைத்தவர்களையும் பற்றி நாம் கேள்விப்படுகிறோம். இதுதான் பகவத் ஸங்கல்பம்.

இதேபோல் உலக சரித்திரத்திலும் சில நிகழ்ச்சிகளைப் பற்றியும் நாம் நினைக்காமல் இருப்பதற்கில்லை. எகிப்தை அடக்கியாளவும் அதன் உரிமைக்குட்பட்ட சூயஸ் கால்வாய்ப் பகுதியை கைவசமாக்கிக் கொள்ளவும் முயற்சித்த பிரிட்டன் பிரான்ஸ் இவைகளின் போக்கை அந்நாடுகளுக்கு அந்தரங்கநாடாகிய அமெரிக்காவே வன்மையாகக் கண்டிக்கிறதென்றால் இது நியாயாபிவிருத்திக்கு அறிகுறியல்லவா.

இவ்விதம் நியாயமானது உலகத்தில் ஒரு காலத்தில் சிலராலோ அல்லது பலராலோ மீறப்படலாம். ஆனால் எல்லோராலும் எல்லாக் காலத்திலும் புறக்கணிக்கப்படமாட்டாது.

இம்மாதிரியான நிலவரங்களையெல்லாம் மனத்திற் கொண்டுதான் நமது பூர்வாசார்யர்கள் பகவத் குணானுபவ ரூபமாக நமக்கு உண்மைகளை உபதேசித்தனர். ஆனால் நாமோ அவர்களைக் காட்டிலும் உண்மையறிவாளிகளென்று எண்ணிக்கொண்டு மனம்போனபடியெல்லாம் கார்யங்களைச் செய்து வருகிறோம்.

* * * * * * *

பாரத அரசாங்கத்தின் (தற்கால ஆட்சி) ராஜ்ய சபையினரில் மனப் போக்குக்கு உட்பட்டிருக்கிறது. மேனாட்டாரின் பழக்க வழக்கங்களிலேயே மோகங்கொண்டு, அவைகளே உயர்ந்தவை என மனத்திற்கொண்டு, அவைகளை ஸாது ஜனங்களின் வாழ்க்கையிலும் புகுத்த விரும்புவது மிகவும் கொடுமையான செயலாகும்.

உதாரணமாக நடைஉடைபாவனைகளை எடுத்துக் கொள்வோம். ஒவ்வொரு நாட்டிலும் ஆஹாரம், உடை, ஆபரணமிவைகளெல்லாமந் நாட்டின் சீதோஷ்ண ஸ்திதிக்குத் தகுந்தபடி அமைந்திருக்கின்றன. உஷ்ண நாடுகளில் பருத்தியாடையும், சரீரத்துக்கு ஆரோக்கியம் கொடுக்கும் வகையில் அமைந்ததாகவும் காணப்படுகிறது. குளிர் நாடுகளில் கம்பளி ஆடைகளும், சரீரத்தை குளிர் பாதிக்காமல் இருக்க, சரீரத்துடன் இறுகப் பிணைப்பதாகவும் இருக்கிறது. சிரஸையும் காப்பாற்ற தொப்பி முதலியவைகளும் ஏற்பட்டுள்ளன. இவ்வுண்மையையறியாமல் நமது

நாட்டில் இரண்டு நூற்றாண்டு காலம் உரிமை செலுத்தி வந்த நாட்டினரின் பெருமையே பெருமையென எண்ணி, அவர்களின் வழக்கங்களையே நாம் பின்பற்றி வருகிறோம் என்பது மிகவும் வருந்தத் தக்க விஷயம். உரிமை செலுத்திய அரசாங்கம் மறைந்தும்கூட, அந்த வாஸனை நம்மை விடவில்லையே. சிகையை வெறுத்தலும் நமது உடையை பரிஹஸித்தலும் ஸர்வ ஸஹஜமாகிவிட்டது.

நடை, உடை, பாவனைகளில் இருந்துவந்த பழக்கங்கள் ஆட்சி முறையைக் கையிற் கொண்ட சட்டசபையினரின் எல்லாவிதமனப் போக்குகளிலும் மாறுபட்டிருக்கின்றன.

நமது ஸமூஹத்தில் ஒருவர் மறித்தால் அவருக்குச் செய்யவேண்டிய ஈமக்கடன்களை முக்கியமாகவேசெய்ய ஒருபையனை ஸ்வீகாரம் செய்துகொள்வதென்ற பழக்கம் ஏற்பட்டுள்ளது. ஸ்வீகார புத்ரன் பெரியவரின் வாழ்நாளில் அவருக்கு உதவுவதைக் காட்டிலும் பிற்காலத்திய கடமைகளைச் செய்யவே அதிகம் உபயோகமாகக் கருதப்பட்டான். அதன் பிரயோஜனமாக அப்பெரியவரின் ஸர்வவித ஸ்தாவர ஜங்கம சொத்துக்களையுமடைந்தான். ஸ்த்ரீகளுக்கு வைதிக கர்மாக்களை ஸ்வதந்த்ரமாகச் செய்ய உரிமையில்லாததால், பெண்களை ஸ்வீகாரம் செய்து கொள்வதென்ற வழக்கம் கிடையாது. அதனால் பிரயோஜனமும் கிடையாது. ஏதோ ஒரு நபர் ஒருபெண்ணிடம் அபிமானம் வைத்தால் அவளுக்கு தன் சொத்தைக் கொடுப்பதற்கு தத்காலமுள்ள பல சட்டங்களே இடமளிக்கும் அப்படியிருக்க சமீப காலத்தில் பெண்களையும் ஸ்வீகாரஞ் செய்துகொள்ளலாம் என்றும் அவளும் ஒரு கோத்ரத்திலோ, ஒரு வம்சத்திலோ, ஒரு ஜாதியிலோ, ஒரு வகுப்பிலோ இருக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தமும் கிடையாது என்றெல்லாம் சட்டமியற்றுவதென்பது நமது ஸமூஹத்தின் அடிப்படைத் தத்துவங்களையே அழிப்பதாகும்.

சிறிய குழந்தையாக இருக்கும் பொழுது "சிகையுடன் இருக்கவேண்டும்" "வேஷ்டி உடுத்திக் கொள்ளவேண்டும்" "எச்சில் செய்யக் கூடாது" "பிறரை நிந்திக்கக் கூடாது" இவைகளை மீறினால் பெருமாள் சபிப்பார். என்றெல்லாம் முன்னோர்கள் கூறிவந்தார்கள் என்றால், ஸமூஹத்தில் நம்பிக்கையும் கட்டுப்பாடும் இருந்தது. அப்படியில்லாமல் வயது வந்த பிறகுதான் கல்யாணம் செய்யவேண்டும் என்று சட்டம் ஏற்படவே, நமது ஸமூஹத்தின் நிலை எவ்வாறு மாறுபட்டுவிட்டது. யௌவனத்தில் கல்யாணம் என்பதே மாறி வார்த்தக்யத்தில் ஸம்பந்தமும் வாதமும் நித்யமான அனுபவங்கள்.

இதேபோல்தான் ஸ்வீகார விஷயமாய் ஏற்படவிருக்கும் சட்டமும் நமது ஸமூஹத்தை மாற்றியே விடும் என்பதில் ஐயமில்லை. இப்படியாக புதுப்புது விதமாக நமது ஸநாதனதர்மத்துக்கு விரோதமான சட்டங்கள் ஏற்பட்டுக்கொண்டேயிருப்பதற்கு என்ன காரணம் என நாம் ஒவ்வொருவரும் ஆராய்ந்தறிய வேணும்.

அமெரிக்காவில் ப்ரசுரித்த ஓர் புஸ்தகத்தின் உரிமையைப் பெற்று, இங்கும் ப்ரசுரிக்க ஆரம்பித்தவுடன், நம் நாட்டில் உள்ள ஓர் சிறுபான்மையோரும், பக்கத்து நாட்டிலுள்ள பெரும்பான்மையோரும் செய்த கிளர்ச்சிக்கு எல்லையே இல்லை. நம் நாட்டு சிறுபான்மையோரின் கிளர்ச்சியும் தலைவிரித்தாடியது. இதைக்கண்ட அரசாங்கமும் அசைந்து கொடுத்தது

இதே அரசாங்கம் பெரும்பான்மையோரில் சிறந்த ஸமூஹத்தை தனதிஷ்டம்போல் மாற்றுவதற்குத் தயங்குவதில்லை. இதை எதிர்க்கவும் நமக்குத் துணிவில்லையே. ஓர் ஸமூஹத்தின் அடிப்படைத் தத்துவங்களையே மாற்றியமைக்கக்கூடிய அளவுக்கு ஓர் அரசாங்கம் தன் கொள்கையை அமைத்துக் கொள்ளுமேயானால் ஜனநாயக முறையில் நாம் நமது உரிமைகளையும் கொள்கைகளையும் நிலை நிறுத்திக் கொள்வதற்கு ஏன் தயங்கவேண்டும். இப்படி நாம் பின்னணியில் இருந்தால் நமது கொள்கைகள் பலவீனமடையும் என்பதில் ஸந்தேஹமே கிடையாது. இனியாவது நாம் நமது நம்பிக்கையைக் கடைப்பிடித்து நமது உரிமைகளுக்காகப் போராட முயற்சிப்போம்.

210735

ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை ஆராத்யராகவும் ஸ்ரீமதாதிவண் சட ஸ்ரீமதழகியசிங்கரின் கோபயதீந்த்ர மஹா திருநக்ஷத்ரமஹோத்ஸவம் தேசிகனை ப்ரதமா சார்யனைகவும்கொண்ட இந்த புராதன ஸ்ரீமதஹோபிலமடத்தில் 43-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத்வேதமார்க்கேத்யாதி பிருதாலங்க்ருத ஸ்ரீ வண்சடகோப, ஸ்ரீ வீரராகவசடகோபயதீந்த்ரமஹாதேசிகனின் திருநக்ஷத்திர மஹோத்ஸவம் பம்பாயில் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது.

திருநக்ஷத்ர தினத்தன்று காலை ஸ்ரீமதழகிய சிங்கர் தானு என்றவிடத்திலிருந்து பம்பாய் எழுந்தருளியாயிற்று. திருநக்ஷத்ரமஹோத்ஸவம் பம்பாயில் நடக்கவேண்டுமென்ற அபிலாஷையுடன் ஸ்ரீ. உப. சடகோபாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ. உப. ரங்கஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி ஸ்ரீ. உப. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி இன்னும் பல ப்ரமுகர்களும், ஆஸ்திகர்களும் ஸ்ரீமதழகியசிங்கர் ஸந்நிதியில் ஹைதராபாத்திலேயே ப்ரார்த்தித்திருந்தனர்.

இவர்களுடைய சரணுகதியைத் தலைக்கட்டி வைக்கவேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் பல இடையூறுகளையும் பொருட்படுத்தாமல் ஸ்ரீமதழகியசிங்கர் இம்மஹோத்ஸவத்திற்கு பம்பாய் எழுந்தருளியாயிற்று என்பதுதான் வஸ்துஸ்திதி. இவ்விடம் நமக்கு ஜ்ஞாபகம் வருவது ஒரே விஷயந்தான்.

பூர்வம் சரணுகதி செய்துள்ள தேவர்களையும், ரிஷிச்ரேஷ்டர்களையும் காப்பாற்றும் நோக்கத்துடன் பரதசரணுகதியை விளம்பித பலனுள்ளதாகச் செய்தும் இதர இடையூறுகளையும் வென்று ஸ்ரீராமபிரான் காட்டுக்கு எழுந்தருளி, ராவணுதி ஸம்ஹாரம் செய்து, பிறகு உலகத்திலுள்ள தபோதநர்களையும் இதர ஸஜ்ஜநங்களையும் ரக்ஷித்தான் என்பது தான்.

இவ்விஷயம் திருநக்ஷத்ரமஹோத்ஸவ தினத்தன்று ஸ்ரீமதழகியசிங்கர் ஸந்நிதியில் ஸந்நிஹிதர்களாக இருந்த எல்லோருக்கும் நன்கு விளங்கும்.

ஸ்ரீமதஹோபிலமடம் ஸ்தாபிதமான தினம் முதல் நமக்குத் தெரிந்த சரித்திர த்ருஷ்டியில் இம்மாதிரியாக ச்ரிய:பதியாகிய ஸ்ரீந்ருஸிம்ஹனுடன் தன் திருமேனி ஸௌகர்யத்தைச் சிறிதளவுகூடக் கணிசியாமல் அவர்களுடைய ப்ரார்த்தனையைத் தலைக்கட்டிவைப்பதென்பது பம்பாய் வாஸிகளுடைய பாக்ய விசேஷத்தினுல் வ்யக்தமாக்கப்பட்டது.

கார்த்திகை பூராடத்தில் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் மிகவும் உத்ஸாஹத்துடன் கொண்டாடப்பட்டது. தென்தேச, வடதேசங்களிலிருந்து நூற்றுக்கணக்கான, ஏன் ஆயிரக்கணக்கான சிஷ்யர்கள் நேரில் வந்திருந்து ஸ்ரீமதழகியசிங்கரை தெண்டன் ஸமர்ப்பித்து, பல மந்த்ராக்ஷதையும் பெற்று, ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனையும் ஸேவித்து 'கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியது கண்டோம்' என்று ஆனந்தித்தார்கள்.

,,பல்லாண்டு பல்லாண்டு'' என்று ஆழ்வார் பகவானுக்குப் பல்லாண்டு பாடியதுபோல் நமது ஸ்ரீமதழகியசிங்கரும் பல்லாண்டு பல்லாண்டு எழுந்தருளியிருந்து நம்மை அனுக்ரஹித்துக்கொண்டு எழுந்தருளியிருக்க வேணுமாய் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனை ப்ரார்த்திக்கின்ருேம்.

நமக்குத் தெரிந்தவரையில், பரந்த இப்பாரத தேசத்தின் பல்வேறு இடங்களையும் எல்லா புண்யஸ்தலங்களையும் அதிவிரைவில் ஸஞ்சாரம் செய்துகொண்டு எழுந்தருளியிருந்த ஸ்ரீமதழகியசிங்கர்களுள், இந்த ஸ்ரீ ஸ்ரீமதழகியசிங்கர் அத்விதீயராக எழுந்தருளியிருக்கிறார் என்பது மிகையாகாது. திருவள்ளூர், திருநாராயணபுரம், சேலம், பாதூர், பம்பாய் என்று ஒவ்வோர் வர்ஷ காலத்துக்குள் ஸஞ்சாரங்களை அதிவேகமாக நடத்திக் கொண்டும், ஆங்காங்குள்ள வைதிக ஸமூஹத்தினரை பரைமைகாந்திகளாவும், ஸாமான்யப்பட்டவர்களை வைதிகர்களாகவும், மாற்றியமைத்துக்

கொண்டு எழுந்தருளியிருக்கிறார் என்பது நமது ஸமூஹத்தில் ஏற்பட்டுள்ள நவீன துஷ்க்ருத்யங்களுக்கும் ஓர் எல்லையுண்டு என்பதை நிதர்சனமாக்குகிறது.

எப்பொழுதெல்லாம் ஸனாதன தர்மத்துக்கு ஆபத்து வருகிறதோ, அப்பொழுதெல்லாம் தர்மத்தை நிலைநாட்டவும், அதர்மத்தை விரட்டவும் "நான் அவதரிக்கிறேன்" என்று ஸ்ரிய: பதி கூறியது எவ்வளவு உண்மை என்பதை மேலே குறிப்பிட்டவைகளிலிருந்து நாம் தினந்தோறும் உணருகிறோம்.

பம்பாயில் சுமார் ஒரு மாதகாலம் ஸ்ரீமதழகியசிங்கர் எழுந்தருளியிருக்கக்கூடும். அங்கிருந்து நாஸிக், பஞ்சவடி க்ஷேத்ரஸஞ்சாரமும், உத்தரபாரத ஸஞ்சாரமும் தொடர்ந்து நடைபெறும் என நம்புவதற்கு இடமுண்டு.

உத்தர பாரதத்திலுள்ள ஜனங்களுக்கும் ஸ்ரீந்ருஸிம்ஹனும், ஸ்ரீமதழகியசிங்கர் ஸேவை ஸாதிக்கவிருக்கிறார்கள் என்பது அவர்களுடைய பாக்யவிசேஷமும் நம் ஸ்ரீ ஸந்நிதியின் பெருமையுமேயாகும்.

318-ம் பக்கத் தொடர்ச்சி

பாதத்தின் பாவத்தை அதற்கு நேராக அங்வயிக்கக்கூடிய பதங்களால் ஸங்க்ரஹிக்காமல் பத்தாவது பாதத்திலிருக்கும் விஷயத்தைஎடுத்து ஸங்க்ரஹித்ததற்கு ஏதோ விசேஷாபிப்ராயம் இருக்கவேணுமென்பது நிச்சயம்.

सर्वथा व्यवहर्तव्यः कुतोह्यवचनीयता என்கிற ப்ரகாரம் ஸ்வாமியின் ஸூக்திகளிலேற்படும் ஸம்சயத்தை பரிகணிதர்களிடமிருந்து தெரிந்து கொள்ளும் ஆஸ்தையில் 'ப்ரியா' மூலம் எழுதினேன். **'गुणदोषौ बुधो गृह्णन्'** என்கிற ப்ரகாரம் லேகத்தில் ஏதாவது தோஷமிருந்தால் க்ஷமித்து ஏற்பட்டிருக்கும் ஸம்சயத்திற்கு ஸமாதானம் அருளிச்செய்யப் பிரார்த்திக்கிறேன்.

குறிப்பு:— இந்த ஸ்வாமியின் வ்யாஸத்திலேயே ஸம்சயத்துக்கு பதிலும் கொடுத்திருக்கிறார். ஒருஸமயம் அதற்குமேல் வேறு ஏதாவது விஷயங்கள் வருமோ என எதிர்பார்க்கிறார் போலும்! பத்தாவது பாதத்தில் உள்ள விஷயமானாலும் ஸந்தர்ப்பம் ப்ராதான்யம் இவைகளைக் காரணங்களாகக் கொண்டு ஒன்பதாவது பாதத்தைச் சேரவேண்டும் என்பதே தகுந்த ஸமாதானம். ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் உக்திக்கு இதுவே பர்யாப்தம் தானே.

ஸம்பாதகர்.

320-ம் பக்கத் தொடர்ச்சி

வரதானத்தை யார் சொல்லியும் கேட்காமல், மாற்றிக்கொள்ளாதது மாதிரி பம்பாய் வாஸிகள் ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்திரத்திற்குப் பம்பாய் எழுந்தருளுவதாக ஸாதித்ததை வரதானம் மாதிரி அவலம்பித்து எத்தனை விதமான அஸௌகர்யங்களும் செலவுகளும் சிரமங்களும் ஏற்பட்டாலும், யார் எப்படிச்சொன்ன போதிலும், அதைப் பொருட்படுத்தாமல் அதை ஸாதித்துக்கொண்டனர். ஸ்ரீமத்ராமாயணத்தின் அந்தக் கட்டத்தினால் பிறகு நல்ல பலன்கள் லோகங்களுக்கு ஏற்பட்டாலும், அப்பொழுது சிலருக்கு சிரமம் இருக்கத்தானிருந்தது. அம்மாதிரி பம்பாய் வருவதில் சில சிரமங்களிருந்தாலும் பம்பாய் வந்த பிறகு பம்பாயிலுள்ள வெகு ஜனங்களுடைய ஸந்தோஷத்தையும், திரள் திரளாக அவர்கள் ஓயாமல் பெருமாளை ஸேவித்து வருவதையும் பார்த்து அந்தக் கட்டத்தை இதற்கு திருஷ்டாந்தமாக ஸாதிக்கும்படியாயிருந்தது

(தொடரும்)

ஸ்ரீ:

ஓர் ஸந்தேஹம்

ஸ்வாமி தேசிகனால் அருளிச்செய்யப்பட்டிருக்கும் அதிகரணஸாராவளியில்,

स्रष्टा देही स्वनिष्ठोनिरवधिमहिमाऽपास्तबाधःश्रिताप्तः
स्वात्मादेरिन्द्रियादेरुचितजननकृत् संसृतौ तन्त्रवाही ।
निर्दोषत्वादिरम्यो बहुभजनपदं स्वार्हकर्मप्रसाद्यः
पापच्छिद्ब्रह्मनाडीगतिकृदतिवहन् साम्यदश्चात्र वेद्यः ॥

என்கிற ச்லோகத்தில் அத்யாத்மஶாஸ்த்ரத்தின் 16 பாதங்களின் ஸாரமும் ஸங்க்ரஹிக்கப் பட்டிருக்கிறது.

இந்த ச்லோகத்தி இரண்டாவதுன் பாதத்தில் **संसृतौ तन्त्रवाही** என்பதற்குச் சிந்தாமணியில் '**जाग्रत्स्वप्नसुषुप्तिमूर्च्छामरणेषु भगवानेव निर्वाहकत्वेन उच्यते**' என்று ஸாதித்திருக்கிறார். ஸ்ரீ ஸந்நிதியில் ஸ்ரீ அழகியசிங்கர் ஸாதித்த பதயோஜனையிலும், **संसृतौ तन्त्रवाही– जाग्रत् .....स्वप्नसुषुप्तिमूर्च्छामरणेषु भगवानेव निर्वाहकत्वेन नवमे वेद्यः इति ।** இதற்கு அடுத்தாற்போல் **निर्दोषत्वादिरम्यः– 'न स्थानतोऽपि परस्योभयलिङ्गं सर्वत्र हि' इत्याद्यधिकरणेषु निर्दोषत्वकल्याणगुणाकरत्वप्रतिपादनात् निर्दोषत्वादिरम्यत्वेन दशमे वेद्यः' इति ।** ஶாரீரகசாஸ்த்ரம் ஒன்பதாவது பாதம் வைராக்யபாதம், '**तदन्तरप्रतिपत्तौ रंहतिसंपरिष्वक्तः प्रश्ननिरूपणाभ्याम्**' என்கிற அதிகரணஸூத்ரம் முதல் '**अन्याधिष्ठिताधिकरणम्**' வரையில் இந்த ஜீவன் ஶரீரத்தை விட்டுக் கிளம்பி ஸூக்ஷ்மஶரீரத்துடன் ஸ்வர்காதிலோகங்களையடைந்து அவரோஹகாலத்தில் வ்ரீஹ்யாதிகளையடைவது அதன் ஸம்ச்லேஷமாத்திரம் தான். அந்த வ்ரீஹ்யாதிஶரீரங்களையடைவதல்ல என்பதான பல விஷயங்களெல்லாம் ஒன்பதாவது பாதத்தில் சொல்லப்பட்டுள்ள விஷயம். அப்படியிருக்க ஸ்ரீ தேசிகன் ஒன்பதாவது பாதமான வைராக்யபாதத்தை ஸங்க்ரஹிக்குமிடத்தில் '**संसृतौ तन्त्रवाही**' என்று ஸாதித்திருக்கிறார். பதயோஜனையிலும் ஸ்ரீ அழகியசிங்கர் **संसृतौ तन्त्रवाही— जाग्रत्स्वप्न... संसारतन्त्रनिर्वाहकत्वेन नवमे वेद्यः' इति** ஸாதித்திருக்கிறார், வாஸ்தவத்தில் **जाग्रत्स्वप्नादि** விஷயம் ஸ்ரீபாஷ்யத்தில் பத்தாவது பாதமான உபயலிங்கபாதமான **सन्ध्यधिकरण**த்தில் சொல்லப்பட்ட விஷயம்.

ஆனால் **सन्ध्ये सृष्टिराह हि** என்கிற ஸூத்ரம் முந்தின ஒன்பதாவது பாதமாகிய வைராக்ய பாதத்தில் சேரவேண்டியிருக்க உபயலிங்கபாதத்தில் சேர்க்கப்பட்டிருப்பதற்கு நிர்வாஹம் **मायामात्रं तु कार्त्स्न्ये इत्यादि** ஸித்தாந்த ஸூத்ரங்களால் '**अथरथान् रथयोगान् सृजते**' முதலிய ச்ருதிப்ரமாணத்தால் பரமாத்மாவின் விசித்ர சக்தியோகத்தை ப்ரஸ்தாவிப்பதால் பரப்ரஹ்மத்தின் கல்யாணகுணங்களை நிரூபிக்கும் இந்த பத்தாவது பாதமான உபயலிங்கபாதத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறதென்று அபியுக்தர்களின் திருவுள்ளம்.

ப்ரக்ருதம் ஏற்பட்ட ஸம்சயம் என்னவென்றால் ஸ்வாமி தேசிகன் அதிகரணஸாராவளியில் **नवमपाद**த்தை ஸங்க்ரஹிக்கவேண்டிய இடத்தில் க்ரமமாக **तदन्तरप्रतिपत्त्यधिवरणादि**களை ஸங்க்ரஹிக்காமல் பத்தாவது பாதத்திலிருக்கும் **सन्ध्यधिकरण**த்தை **संस्मृतौ तन्त्रवाही** என்று ஒன்பதாவது பாதத்தின் விஷயமாகச் சொன்னதின் தாத்பர்யமென்னவென்பது தான்.

ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரர் போன்ற மஹான்கள் சொல்லும் விஷயங்களெல்லாம் 'வேதசாஸ்திரதாரூடர் சொல்லும் அவிடும் சுருதியாம்' என்கிற ப்ரகாரம் ச்ருதிப்ரமாணமாக பாவிக்கவேண்டிய விஷயமானதால் அதற்கு ஏதாவது முக்யமான காரணங்களிருக்கவேணுமானதால் **न हि सन्देहादलक्षणम्** என்கிற ப்ரகாரம் நம் புத்திக்கு ஆகாத விஷயங்களை ஆசார்யர்கள் உபதேசித்தபடி எடுத்துக்கொள்ளவேண்டியதேயொழிய பரமாசார்யாள் ஸூக்திக்கு நிர்வாஹம் சொல்லாமல் விட்டுவிடக்கூடிய விஷயமே கிடையாது. ஸ்ரீ தேசிகன் ஒன்பதாவது

(தொடர்ச்சி 317-ம் பார்க்க)

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

முன் ஸஞ்சிகையில் லோனி என்ற யிடம் 'லோனி இந்தாப்பூர்' என்று வைத்துக் கொள்ளவேண்டும். 13-11-56 ராத்ரி லோனியிலிருந்து புறப்பட்டு 13 மைலிலுள்ள குப்பர்காம் எழுந்தருளினர். 14-11-56 ராத்ரி புறப்பட்டு 13 மைல் தூரத்திலுள்ள ராவங்கோன் எழுந்தருளினர். 15-11-56 ராத்ரி புறப்பட்டு 14 மைல் தூரத்திலுள்ள பட்டாஸ் எழுந்தருளியாயிற்று.

16-11-56 புறப்பட்டு 14 மைல் தூரத்திலுள்ள யாவத் எழுந்தருளியாயிற்று. மறுநாளும் யாவத்திலேயே எழுந்தருளியாயிற்று. அன்று அவ்விடத்தில் திருமுடி விளக்கம் ஆயிற்று. திருக்கார்த்திகை தீப உற்சவம் நடந்தது. அன்று ராத்ரி புறப்பட்டு 16 மைல் தூரமுள்ள லோனிகான்பூர் எழுந்தருளினர். 19-11-56 மறுநாள் மத்யானம் அங்கிருந்து புறப்பட்டு ராத்ரி 7 மணிக்கு 11 மைல் தூரமுள்ள பூனா எழுந்தருளினர். பூனா வாசிகள் மிக குதூகலமாக வரவேற்று பெரிய சத்திரத்தில் எழுந்தருளப் பண்ணினர்கள். 20, 21-ந் தேதிகள் அவ்விடமே எழுந்தருளியிருந்தார். ஷோலாப்பூர் வாசிகள் மாதிரி, அவ்வூர் வாசிகளிருகலையாரும் தங்கள் தங்கள் கோயிலுக்கு ஸ்ரீமதழகிய சிங்கரெழுந்தருளவேண்டுமென்றுப்ரார்த்தித்ததின்பேரில்தந்தப்பல்லக்கில் வீதிவலமாக ராமர் கோயிலுக்கும், ஸ்ரீலக்ஷ்மீநாராயணன்கோயிலுக்கும் எழுந்தருளி கடாக்ஷித்து எழுந்தருளியாயிற்று. ராமர் கோயிலில் பட்டும், ஸம்பாவனையும் செய்தார்கள். ஸ்ரீலக்ஷ்மீநாராயணன் கோயிலில் சால்வையும் விசேஷ ஸம்பாவனையும் செய்தார்கள். 21-11-56 ராத்ரி புறப்பட்டு ஹைதராபாத் கோவர்தன லால்சேட்டுக்கு சொந்தமான பண்ட் கார்டன்ஸ் பங்களாவுக்கு எழுந்தருளினர். அன்று ராத்ரியே பம்பாய் எழுந்தருள வேண்டுமென்று முன் உத்தேசித்திருந்தும் போகிகளுடைய அஸௌகர்யத்தால் புறப்பட முடியவில்லை. போகிகள் தங்களுக்கு உடம்பு அஸௌகர்யமாய் இருக்கிறது என்றும் ஊருக்குப்போக வேண்டுமென்றும் ஒரே பிடிவாதமாக ஊருக்குப் புறப்பட்டு விட்டார்கள்.

ஸ்ரீமதழகியசிங்கர் திருநக்ஷத்திரத்தை பூனாவிலேயே நடத்தலாமென்று பூனாவாஸிகளுக்கு எண்ணமிருந்தும், பம்பாய் வாஸிகளுடைய ஆஸ்தாதிசயத்தை சோதிப்பதற்காக வேபோலும், பெருமாள் போகிகளுக்கு அந்த எண்ணத்தை உண்டுபண்ணிவிட்டார் என்று நினைக்கவேண்டியிருக்கிறது.

24-11-56 சனிக்கிழமை முதலே பம்பாயிலிருந்து பெருமாளையும் ஸ்ரீ அழகியசிங்கரையும் எழுந்தருளப்பண்ணுவதற்கு அதிக ஆட்களை அனுப்பிக்கொண்டே வந்தார்கள். அவர்களுடைய விடாமுயற்சியைக் கணிசித்து எவ்வளவு அஸௌகர்யமிருந்தாலும் பம்பாய்க்குப் புறப்படுவதாகத் திருவுள்ளம்பற்றி 27-11-56 செவ்வாய்க்கிழமை காலை அபிகமன ஆராதனமானதும் அதை விட்டுப் புறப்பட்டாயிற்று. வழியில் மலையிலிருந்து 1500 அடி இறங்க வேண்டியிருக்கிறபடியால் 22-11-56 வியாழக்கிழமையே பம்பாய்க்குப் புறப்படுவதாகத் தீர்மானித்ததை உத்தேசித்து சில ஸாமான்களை பம்பாய்க்குக் கொண்டு போய்ச் சேர்த்து விட்டார்கள். செவ்வாய்க்கிழமை மத்யானம் 12 மணிக்கு 11 மைல் தூரமுள்ள பிம்பிரிக்கு எழுந்தருளினர். 28-11-56 மத்யாஹ்னம் புறப்பட்டு 13 மைல் தூரமுள்ள டால்காவுக்கெழுந்தருளினர். 29-11-56 துவாதசி ஆராதனம் அங்கு நடந்தது. அன்று மத்யாஹ்னம் புறப்பட்டு 10 மைல் தூரமுள்ள காம்ஷெட்டில் ராத்திரி தங்கி ப்ரதோஷ ஆராதனத்தை முடித்துக்கொண்டு, அங்கிருந்து பின் மாலை புறப்பட்டு 10 மைலிலுள்ள லோனவ்லாக்கு எழுந்தருளினர். அன்று காலை அபிகமனம் வெகு நாழிகை கழித்து நடந்தது. ஸ்வாதி

திருமஞ்ஜனமும் அவ்விடத்தில் நடந்தது. அங்கிருந்து 1-12-56 மத்யாஹ்னம் புறப்பட்டு 8 மைல் தூரத்திலுள்ள கப்போலி எழுந்தருளினர். அவ்விடம் தான் 1500 அடி கீழே இறங்கவேண்டியிருந்தது. 2-12-56 ராத்ரி புறப்பட்டு 22 மைல் தூரமுள்ள பான்வேலுக்குக் காலை பத்து மணிக்கு எழுந்தருளினர். 4-12-56 காலையில் இஜ்யையையும் முடித்துக்கொண்டு புறப்பட்டு 18 மைல் தூரத்திலுள்ள தாணுவுக்கு ராத்திரி 9 மணிக்கு எழுந்தருளினர். தாணுவில் ராத்திரி ஆராதனம் பண்ணிக்கொண்டு பின் மாலை புறப்பட்டு தாணு ஊர் கோடியிலுள்ள ஒரு பங்களாவில் 5-12-56 காலை அநுஷ்டானம் பண்ணிக்கொண்டு அவ்விடத்திலேயே அன்று இஜ்யை ஆராதனத்திற்கு இருந்துவிடலாமா என்று திருவுள்ளம் பற்றியிருக்கும் ஸமயத்தில் பம்பாய் வாஸிகள் இவ்வளவு நாங்கள் சிரமப்பட்டும் இன்று பம்பாய் எழுந்தருளாமல் போனால் எங்களுடைய தௌர்பாக்யத்தை என்னவென்று சொல்வது என்று மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டார்கள். நரஸிம்ஹபுரத்திலிருந்தும் பல்லக்கு எழுந்தருளப்பண்ண ஆட்களும் வந்தார்கள். பம்பாய் வாஸிகளுடைய பரிச்ரமத்தை உத்தேசித்து அவர்கள் ஏமாற்றமடையக்கூடாது, வரதானம் பண்ணினாற்போல் ஒத்துக்கொண்ட விஷயமானபடியால், பம்பாய்க்கே போய்விடுவதென்றும், அங்கேயே போய் அபிகமனம் நடக்கட்டுமென்றும் திருவுள்ளம் பற்றி காலை 6-30 மணிக்கு அதை விட்டுப் புறப்பட்டாயிற்று. ஆனால் வந்த போகிகளும் ஐந்தாறுமைல்தூரம் சரியாகவந்துவிட்டுப் பிறகு அவர்களுக்கு ஊரிலிருந்து வந்த சிரமத்தால் ஶக்யமில்லைஎன்று நின்றுவிட்டனர். பூனாவிலிருந்துபுறப்பட்டது முதல் பம்பாயிலிருந்து ஆள் அனுப்பியவர்கள் முடியவில்லை என்று திரும்பிப்போனால் வேறு ஆட்களை திரும்பத் திரும்ப அனுப்பிக்கொண்டே வந்தார்கள். ஆனால் அன்றைய தினம் நரஸிம்ஹபுரம் ஆட்கள் பழகினவர்கள் என்ற காரணத்தால் ஸௌகர்யமாக எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வருவார்களென்று பம்பாயில் பம்பாய் வாஸிகள் ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளுவதை ப்ரதீக்ஷித்துக்கொண்டிருந்தார்கள். நாழிகை ஆகிக்கொண்டிருப்பதை உத்தேசித்தும், பம்பாய் வாஸிகள் ஏமாற்றம் அடையக்கூடாது என்கிற காரணத்தினாலும் பல்லக்கை விட்டுவிட்டே, ஸ்ரீ அழகியசிங்கர் வேகமாக எழுந்தருளும்படியிருந்தது. இது விஷயம் பம்பாய் வாஸிகளுக்குத் தெரிந்ததும் அவர்கள் நடு வழியில் ஸ்ரீ அழகியசிங்கருடன் இம்மாதிரி நேர்ந்துவிட்டதைப்பற்றி ஒருபுறம் வருத்தமும், தங்களிடம் ஸ்ரீ அழகியசிங்கர் வைத்திருக்கிற க்ருபையைப் பார்த்து ஒரு புறம் ஸந்தோஷத்துடனும் கூடவே அநுயாத்திரையாக வந்தார்கள். ஸையானுக்கு எழுந்தருளும்போது 12 மணியாகிவிட்டது. வந்ததும் கொஞ்சம் சிரமபரிஹாரம் பண்ணிக்கொண்டு பிறகு அநுஷ்டானாதிகளை முடித்துக்கொண்டாயிற்று. அன்று 2 மணிக்கு விச்வரூபம் முதலிய ஆராதனங்கள் நடந்து ஸம்பாவனை ஸ்ரீ பாததீர்த்தம் கோஷ்டி நடந்து 5 மணி ஸ்வாமாருக்குத் ததீயாராதனம் நடந்தேறியது. 6-12-56 ல் ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கர் திருநக்ஷத்திரமும் ஸேவை சாற்றுமுறைகளுடன் நடந்தது. ராத்திரி டோலையும் நடந்தது. விசாலமான இடமும் கிணறும் அமைத்து ஸௌகர்யமாயிருப்பதால் வெகு ஜனங்கள் வந்து ஸேவித்தார்கள். கிட்டத்தட்ட 1 மாதம் வரையில் எழுந்தருளியிருக்கவேண்டுமென்று ப்ரார்த்தித்துக்கொண்டு இருக்கிறார்கள். 7-12-56 வெள்ளிக்கிழமை டோலோத்ஸவம் பண்ணிவைத்தார்கள். 9-12-56 ஞாயிற்றுக்கிழமை எல்லாப் பெருமாளுக்கும் திருமஞ்ஜனம் (பெரியதிருமஞ்ஜனம்) நடந்தது. ராத்திரி டோலை பண்ணிவைத்தார்கள். அப்போது ஸ்ரீ அழகியசிங்கர் 'ஆசார ப்ராதான்யத்தையும் சிகையின் அவச்ய'த்தையும் பற்றி எல்லோர் மனதிலும் படும்படி உபந்யஸித்தாயிற்று; 11-12-56 செவ்வாய்க்கிழமையும் டோலை நடந்தது. ஸ்ரீ அழகியசிங்கரின் உபதேசத்தைக் கேட்டு ஒவ்வொருவராக கிராப்பை எடுத்து விட்டு சிகையுடன் வருகிறார்கள். ஸ்ரீமத்ராமாயணத்தில் கைகேயி

(தொடர்ச்சி 317-ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ:

இரண்டு தேசிகரத்னங்கள்

திருவேங்கடத்திருப்பதியில் எழுந்தருளியிருந்து திவ்யலீலைகள் புரிந்து மகிழ்ந்து வரும் திருவேங்கடமுடையானை ஒரு க்ருஷீவலனாக வர்ணித்துள்ளார்கள். எல்லா க்ருஷிகர்களையும் போல் அவனும் பயிர்களை விளைவித்து வளர்த்து வருகிறான். அவன் வளர்ப்பது சரணாகதப்பயிர். அந்தப் பயிர் இலேசில் வளர்வதன்று. அதை அவன் செழுமையாக வளர்க்கவேண்டிப் பட்டபாடு மிகவுமதிகம். அவன் பலவிதமான முயற்சிகளைச் செய்தும் தான் செய்த க்ருஷிக்கேற்ற பலனை அடையவில்லை. கடைசியில் நன்றாகப் பண்படுத்திய சுபக்ஷேத்ரத்தில் அவன் சில வித்துக்களை நட்டான். அது புரட்டாசி மாஸமாக ஸம்பவித்தது. 'புரட்டாசி பதினைந்தில் நட்ட நடவு பெரியோர்கள் வைத்த தனம்' என்று ஒரு பழமொழியுண்டு. அதாவது ஒரு க்ருஷிகன் பண்படுத்திய பூமியில் பயிர்கள் செழித்து வளரக் காரணமான புரட்டாசி மாஸத்தில் விதைகளை நட்டு வளர்த்தானாகில் அவை அமோகமாகப் பலனைத்தரும். அதைக்கொண்டு பெரியோர்கள் தேடிவைத்த ஸொத்தையுடைய ஒருவன் எவ்வாறு தனக்கு ஒருவிதமான சிரமுமில்லாமல் ஸுகமாக வாழ்க்கையை நடத்துவானோ அவ்வாறு அந்த க்ருஷிகனும் ஆனந்தமாக வாழ்க்கையை நடத்துவான் என்று அதன் பொருள். அந்தப் பழமொழி திருவேங்கடமுடையான் விஷயத்தில் அர்த்தமுள்ளதாக ஆயிற்று. அவன் நடவு செய்த சரணாகதப் பயிர்கள் அமோகமாக செழித்து வளர்ந்தன. அந்தப் பயிர்களால் பூமிமுழுவதும் நிறைந்துவிட்டது. 'சரணாகதஸஸ்யமாலினீயம் வ்ருஷசைலேச க்ருஷீவலம் தினோதி' என்றபடி செழித்து வளர்ந்த இந்த சரணாகதப் பயிர்களை மாலைமாலையாகப் பூண்டுகொண்டு பூமிதேவி திருவேங்கடமுடையானாகிய க்ருஷிகனை மகிழச் செய்கிறாள்.

திருவேங்கடமுடையான் விளைவித்த சரணாகதப் பயிரின் வித்துக்கள் ஸ்ரீமத்வேதாந்த தேசிகனும், ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகனும்தான்.

இந்த இரண்டு திருநாமங்களுக்கும் நமது ஆசார்யபரம்பரையில் மிகவும் உயர்ந்த சிறந்த ஸ்தானங்கள் உண்டு. இவர்கள் நமது ஸம்ப்ரதாயத்திற்கும் உலகத்திற்கும் புரிந்துள்ள தொண்டுகள் ஈடு இணையற்ற சிறப்புடையவை. இவ்விருவர்களும் பண்ணியுள்ள உபகாரத்தின் சிறப்பை நாம் உணரவேண்டுமானால், இவர்கள் அவதரிக்காமலிருந்தால் என்னவாயிருக்கும் என்று யோசித்துப் பார்க்கவேண்டும். இவர்கள் அவதரியாமலிருந்தால் நமது ஸம்ப்ரதாயம் இன்றுள்ள நிலையில் இருக்கமுடியாது. விசிஷ்டாத்வைதமதம் அநாதிதான். ஆயினும் அதைத் தகுந்தபடி ப்ரசாரம் பண்ணக்கூடிய மஹான்களில்லாவிட்டால் அது குடத்திற்குள் அகப்பட்ட விளக்குப்போல் ப்ரகாசமின்றியிருக்கும். அதன் ப்ரபாவங்களை நன்கறிந்த பெரியோர்கள், கண்ணன் ஸ்ரீமத்பகவத்கீதையில் 'கச்சித்' என்று கூறியதுபோல் யாரோ ஒரு சிலராகத்தான் இருக்கமுடியும். அல்லது அந்த 'கச்சித்' என்ற பதத்திற்கு 'ந கச்சித் இத்யர்த்த:' என்று பாஷ்யகாரர் உரை கூறியதுபோல் ஒருவருமே இல்லாமல் போயிருந்தாலும் போயிருக்கும். ஸ்ரீதேசிகன் அவதரித்தகாலம் நமது ஸம்ப்ரதாயத்திற்கு உண்மையில் ஒரு சோதனைக் காலந்தான். அதனால்தான் பெரியோர்கள்

'வேதே ஸஞ்சாதகேதே முநிஜநவசநே ப்ராப்த நித்யாவமாநே ஸங்கீர்ணே ஸர்வவர்ணே ஸதி ததநுகுணே நிஷ்ப்ரமாணே புராணே । மாயாவாதே ஸமோதே கலிகலுஷவசாத் சூந்யவாதே ऽவிவாதே தர்மத்ராணாய யோ ऽபூத் ஸ ஜயது பகவான் விஷ்ணுகண்டாவதார: ॥

என்று அநுஸந்தித்தார்கள். அதாவது வேத சாஸ்த்ரங்களின் பெருமை குன்றிப்போய் ரிஷி

களுடைய ஸூக்திகளெல்லாம் தூஷிக்கப்பட்டு வர்ணஸங்கரங்கள் ஏற்பட்டு அதற்குத் தகுந்தாற்போல் புராணங்களை ப்ரமாணங்களாக ஒருவரும் ஏற்றுக்கொள்ளாமற்போய், மாயாவாதங்கள் களித்துக் கொம்மாளமிட கலியின் கொடுமையால் நாஸ்திகவாதம் தலையெடுத்துக் கூத்தாடும்போது ஸநாதநதர்மத்தை ஸம்ரக்ஷிப்பதற்காகத் திருவேங்கடமுடையானுடைய திருமணியாழ்வாரே ஸ்ரீ தேசிகனாக வந்து அவதரித்தார் என்று பொருள். எனவே 'யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர்பவதி பாரத । அப்யுத்தாநமதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம்' ॥ என்றபடி தர்மத்தின் பெருமை குறைந்ததர்மம்தலையெடுத்துநிற்கும்போதவதரிக்கிற பெருமாளுடைய அவதாரம்போன்று விளங்கியது ஸ்ரீ தேசிகனுடைய அவதாரமும். உலகத்தார் பண்ணிய மஹத்தானபாக்யத்தின் பரிணாமமாக அவதரித்தார் ஸ்ரீ தேசிகன். அவதரித்து வைதிகலக்ஷ்மிக்கேற்பட்டிருந்த இன்னல்களையெல்லாம் போக்கினார். வேதம் வேதாந்தம், புராணம், இதிஹாஸம் தர்மசாஸ்திரம் முதலியவற்றின் ஸாரங்களையும், தத்வ ஹிதபுருஷார்த்தங்களையும் ஆத்மோஜ்ஜீவனத்திற்கு உற்ற வழிகளையும் ஒன்று இரண்டு என்றில்லாமல் நூற்றுக்கும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பலவகையான க்ரந்தங்களில் நாமெல்லாம் நன்கறியும் வண்ணம் தெளிவாக விளக்கினார். இந்தக் கிரந்தங்களெல்லாம் உலகத்திலுள்ள அதிகாரிகளின் ருசிக்கும் சக்திக்கும் தகுந்தபடி கடினமாகவும், ஸரளமாகவும் பெரியதாகவும், சிறியதாகவும், கத்யமாகவும், பத்யமாகவும், காவ்யமாகவும், சாஸ்த்ரமாகவும், வடமொழியாகவும், தென்மொழியாகவும் பலபடியாக விளங்குகின்றன. இவைகளெல்லாம் ஸேவிக்கும்போது இன்பம் பயப்பதோடு நின்றுவிடாமல் ஆத்மாவுக்கு நன்மையையும் பயப்பனவாக இருக்கின்றன. 'சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான் பாரொன்றச் சொன்ன பழமொழியுள் ஓரொன்று தானே யமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு வானேறப் போமளவும் வாழ்வு' என்றபடி இந்த நூல்களில் ஏதாவது ஓரொன்றைக் கற்றறிந்தாலும் அதனால் ஸகலமான ஐஹிகபோகங்களையும் ஆமுஷ்மிகமான மோக்ஷத்தையும் அடைந்து ஆனந்திக்க வழியுண்டு. இப்படிப்பட்ட மஹத்தானகிரந்தங்களில் ஏதாவது சிலவற்றை மாத்திரமேனும் கற்றறியும் பாக்யம் ஒருவனுக்குக் கிடைத்தால் அவன் தனது ஆயுள்வரையில் ஸ்ரீ தேசிகனுடைய உபகாரத்தைப் போற்றாமல் இருக்கமாட்டான்.

ஸ்ரீ தேசிகனுடைய கிரந்தங்களில் பரிசயம் ஏற்பட்டால் அதனால் மனது பரிபக்வமடைந்து அநாத்மகுணங்கள் நீங்கி ஆத்மகுணங்களெல்லாம் உண்டாவதாலும் சிறிது காலம் செய்யும் பயிற்சியினால் நெடுநாள் வரையில் சாஸ்த்ரங்கள் படிப்பதாலுண்டாகும் பலன் உண்டாவதாலும் ஜ்ஞானம், பக்தி, வைராக்யம் முதலியவை உண்டாவதாலும் பகவத்குணாநுபவத்தில் ஈடுபடுத்துவதாலும் இந்த ஸூக்திகளின் ரஸாநுபவம் நாம் இங்கிருக்கும்போதே நமக்கு மோக்ஷாநந்தத்தைக் கொடுக்கிறது.

நன்று. இவ்வாறு ஸ்ரீ தேசிகன் ஏராளமான க்ரந்தங்களை அருளிச்செய்தார். ஸ்ரீ தேசிகன் காலத்திற்குப் பின் ஸூர்யன் ப்ரகாசிக்கும்போது மறைந்தோடிய இருள்கூட்டங்கள் ஸூர்யனுடைய அஸ்தமனத்திற்குப் பிறகு தோன்றுவதுபோல் ஸ்ரீ தேசிகனாகிய ஜ்ஞாநஸூர்யன் மறைந்தபோது தீயசக்திகள் மறுபடியும் தலைப்பட்டு உலகத்தை வந்து ஆக்ரமித்தன. அப்போது மற்றொரு மஹாபுருஷன் ஆவிர்ப்பவித்தார். அவர்தான் ஸ்ரீமத் ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன். ஸ்ரீ தேசிகனுக்கு ஸரிநிகர்ஸமானமாக விளங்கினார் இந்த ஆசார்யன். ஸ்ரீ தேசிகன் கருணையினால் பட்டோலையிட்டுவைத்த க்ரந்தங்களையும் ஆழ்வார், ஸ்ரீபாஷ்யகாரர் முதலிய பூர்வாசார்யர்கள் அருளிய க்ரந்தங்களையும் இம்மஹான் ப்ரசாரம் பண்ணினார். இவருடைய ப்ரபாவங்கள் அந்யாத்ருசங்கள். இவருடைய ப்ரபாவங்களைக்கண்டு ஸ்ரீமத்பாஷ்யகாரரால் ஸம்ப்ரதாயப்ரவசனத்திற்காக நியமிக்கப்பட்ட 74 ஸிம்ஹாஸநாதிபதிகளும் இவர் திருவடிகளில் ஆச்ரயித்து இவரைத் தங்களுக்கு அத்யக்ஷராக்

கிக்கொண்டார்கள். இவர் காலத்திலும் பல குத்ருஷ்டி வித்வான்கள் இவரை வந்து வாதுக்கிழுத்தார்கள். அவர்களையெல்லாம் இந்த மஹான் வாதில் வென்று வாகை சூடினார். நம்முடைய தர்சனத்தின் அர்த்தங்களையெல்லாம் தம்மை ஆச்ரயித்த சிஷ்யகோடிகளுக்கு உபதேசித்து தர்சனத்தின் பெருமைகளைப் பிரகாசப்படுத்தினார். இவர் செய்தருளிய இத்தகைய மஹத்தான கைங்கர்யத்தால் தர்சனம் தழைத்து வளர்ந்தது. இவ்வாறு தர்சனத்தை வளர்த்த இந்த மஹான் தமது காலத்திற்குப் பிறகு இந்தத் தொண்டு உத்தமாதிகாரிகளால் அவிச்சின்னமாகவும் ஆசந்த்ர தாரகமாகவும் நடத்தப்படவேண்டும் என்னும் திருவுள்ளத்தினால் ஸ்ரீமதஹோபிலமஹாஸ்தானத்தையும் உயர்ந்த அடிப்படையில் ஆரம்பித்துவைத்து அதை நிலை நிறுத்தினார். இந்த ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகனை ஸ்ரீபாஷ்யகாரர் ஏற்படுத்திய 74. ஸிம்ஹாஸநாதிபதிகளும் வந்து ஆச்ரயித்தபடியால் இவரை ஆசார்யனாக ஏற்றுக்கொள்ளாத ஸ்ரீவைஷ்ணவபரம்பரை ஒன்றுமே கிடையாது. காட்டில்திரியும் சிங்கத்திற்கும் ம்ருகராஜனாகப் பட்டங்கட்டி அபிஷேகம் பண்ணிவைப்பவர்கள் யாருமில்லை. அப்படியிருப்பினும் அது ஸ்வயமாகத் தன்னுடைய விக்ரமங்களாலும் ஸாமர்த்தியத்தாலும் எல்லா ம்ருகங்களையும் அடக்கி அவற்றின் பஹுமானத்தைப் பெற்றுத் தானே ம்ருகேந்திரனாக ஆயிற்றல்லவா? அதுபோலவே ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனும் தம்முடைய ஜ்ஞாந, பக்தி வைராக்யாதிசயங்களால் உலகத்திலுள்ளோர் அனைவருடைய உள்ளங்களைக் கவர்ந்து ஜகதாசார்யனானார். ஸ்ரீ சிங்கப்பிரானைத் தாம் வயப்படுத்தித் தாம் ஓர் அழகியசிங்கரானதோடு தமக்குப்பின் வரும் ஆசார்யர்களையும் அழகிய சிங்கர்களாகப் பண்ணினார். அவருடைய மஹத்தான ஸாதனைகளின் அடையாளந்தான் இன்று உலகத்திலுள்ளோர் அனைவரும் திசை நோக்கித் தொழுகின்ற ஸ்ரீமதஹோபிலமடமாகத் திகழ்கின்றது. நமக்கெல்லாம் ஆத்மோஜ்ஜீவகமான வ்யாபாரங்கள் கொஞ்சமும் குறைவில்லாமல் நடந்துவருகின்றன. ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் அவதரித்திராவிட்டால் இந்த பெருமையெல்லாம் நமக்கு எங்கே கிடைக்கும்?

எனவே ஸ்ரீ தேசிகனும் ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்திரமஹாதேசிகனும் அவதரித்திராவிட்டால் நமது ஸம்ப்ரதாயம் எந்த நிலைமையில் இருந்திருக்குமோ! அறியோம்

இவ்விரு திருநாமங்களின் சரித்ரங்களும் ஸ்ரீசக்ரவர்த்தித் திருமகனுடைய திவ்யசரித்ரம்போலும் ஸ்ரீகண்ணபிரானுடைய சரித்ரம் போலும் பரமாத்புதமாகவும் பரம பாவநமாகவும் விளங்குகின்றன.

இவ்விருவரும் திருவேங்கடமுடையானுடைய அநுக்ரஹ விசேஷத்தால் அவதரித்த பெருமையைப் பெரியோர்கள் போற்றுகிறார்கள்.

முத்திதரும்நகரேழுக்குள்ளும் முக்கியமாகத் திகழ்வது கச்சித் திருப்பதி. அதற்கருகாமையிலுள்ள தூப்புல் என்னும் ஸ்தலவிசேஷத்தில் எழுந்தருளியிருந்த ஆஜாநுசுத்தரான அநந்தஸூரிகள் என்னும் பாகவதோத்தமருக்கும் அவருடைய தேவிகளான தோதாரம்மைக்கும் திருவேங்கடமுடையான் ஸ்வப்னத்தில் தோன்றி 'நீங்கள் நம்மைத் திருவடி தொழத் திருமலைக்கு வாருங்கள். அவ்வாறு வந்தால் உங்களுக்கு ஒரு புத்ரரத்னத்தை அளிக்கிறேன்' என்று நியமித்தருளினார். அவர்களும் அவ்வாறே ஒரு தீர்த்தோத்ஸவத்தில் திருமலைக்குச் சென்று எம்பெருமானைத் திருவடி தொழுதார்கள். அந்தத் தம்பதிகளை எம்பெருமான் அங்கு பரிபூர்ணமாக அநுக்ரஹித்தருளி பின்பு தோதாரம்மையின் ஸ்வப்னத்தில் தோன்றி அவரிடம் தமது ஸ்வர்ண கண்டையைக் கொடுத்து அவரை விழுங்கச் செய்து அது தொடங்கி கர்ப்பந்தரித்த அந்த அம்மையின் திருவுதரத்தில் ஸ்ரீ தேசிகனை அவதரிப்பித்தார். இத்தகைய ஸ்ரீ தேசிக அவதாரமஹிமையை அறியாதவர்கள் ஒருவரும் இருக்கமாட்டார்கள். அதுபோலவே திருநாராயணபுரத்தில் பரமபாகவதர்களும், தமிழ்வேதத்தைப் ப்ரவசநம் பண்ணிய ஆசார்

யர்களுமான பெரியோர்களுடைய ஒரு வம்சத்தில் கிடாம்பி கேசவாசாரியர் என்னும் ஸ்வாமிக்கு திருவேங்கடமுடையானுடைய அநுக்ரஹவிசேஷத்தால் ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திருக்குமாரராக அவதரித்தருளினார்.

இவ்விரு திருநாமங்களும் திருவேங்கடமுடையானுடைய அனுக்ரஹவிசேஷத்தால் அவதரித்த பெருமை தோன்ற அவர்களுக்கு அவர்களுடைய திருத்தகப்பன்மார்கள் திருவேங்கடமுடையான் என்றும் கிடாம்பி ஸ்ரீநிவாஸாசார்யர் என்றும் திருமலையப்பனுடைய திருநாமங்களையே திருநாமங்களாகச் சாற்றினார்கள். இவ்விருவர்களும்எம்பெருமானுடைய அவதாரவிசேஷங்களானதால் தங்களுடைய பால்யப்பருவத்திலேயே தாங்கள் விலக்ஷண புருஷர்கள் என்று எல்லாரும் கொண்டாடுமாறு தங்களுடைய ஜ்ஞானவிகாஸங்களை நன்கு காட்டிக்கொண்டு சக்ரவர்த்தித் திருமகன் வஸிஷ்டரிடமும் கண்ணன் ஸாந்தீபினியிடமும் கல்விகற்றதுபோல் ஆசார்யகரமாகக் கல்விபயின்று மிகச் சிறுபிராயத்திலேயே சொல்லார் தமிழொரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லையில்லா அறநெறிகள் யாவும் அறிந்து மிகுந்த தேஜோவான்களாக விளங்கினார்கள். பால்யத்தில் இவர்கள் காட்டிய ஜ்ஞானவிகாஸத்துக்கு உதாரணமாக ஸ்ரீதேசிகன் தமது ஐந்தாம் பிராயத்தில் தமது மாதுலரான அப்புள்ளாரோடு நடாதூரம்மாளுடைய காலக்ஷேபகோஷ்டிக்குச் சென்று அங்கு தம்முடைய தேஜோவிசேஷத்தினால் அங்குள்ளார் அனைவருடைய உள்ளங்களையும் கவர்ந்து, பின்பு காலக்ஷேபத்தில் நிறுத்திய இடத்தை மறந்து ஒருவரையொருவர் கேட்டுக்கொண்டிருந்த எல்லாரும் கேட்டுப் பிரமிக்குமாறு தாம் வரும்போது நடந்த காலக்ஷேப பங்க்தியை எடுத்துக்காட்டி எல்லாராலும் அதிலும் விசேஷமாக நடாதூரம்மாளாலும் கொண்டாடப்பட்ட பெறுமையும் அவ்வாறே ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் ஆசார்யபுருஷனாக விளங்கிய தமது தந்தையிடம் ஸம்ப்ரதாயார்த்தங்கள் எல்லாம் கேட்டபிறகு அவருடைய ஜ்ஞானத்தின் மிகுதியைக்கண்ட அவர் தந்தையால் மிகவும் ஸந்தோஷத்தோடு உம்முடைய ஆஸ்தைக்குத் தகுந்தபடி விஷயங்கள் சொல்லக்கூடியவர்கள் இப்போது ஒருவர்தான் உளர். ஒரு கடிகைநேரத்தில் நூறு ச்லோகங்கள் கவனம் செய்யக்கூடிய சக்தியுள்ளமையால் கடிகாசதம் அம்மாள் என்று பெயர்பெற்று ஸித்தாந்தத்தை ப்ரவசனம் செய்து வரும் வரதவிஷ்ணு ஆசார்யர்தான் அவர். அவரிடம் சென்று ஆச்ரயித்து விசேஷார்த்தங்கள் கேட்டு வாரும் என்று நியமிக்கப்பட்ட பெருமையும் அநுஸந்திக்கத்தகுந்தவை.

இந்த நிலையில் இவ்விரு திருநாமங்களையும் எம்பெருமான் தமது கைங்கர்யத்தில் ஈடுபடுத்திய அற்புதங்களும் நம்மை மெய்சிலிர்க்கச் செய்கின்றன.

சீரொன்றுதூப்புல் திருவேங்கடமுடையான் தாம் பால்யத்தில் கற்கவேண்டிய ஸாமாந்ய சாஸ்த்ரங்களையும் வேதாந்தசாஸ்த்ரங்களையும் நன்றாகக் கற்று அதிகரித்தபின்பு தமக்கு உபதேசிக்கப்பட்டிருந்த வைநதேய மந்திரத்தை ஆவ்ருத்தி செய்வதற்காக திருவஹீந்திரபுரத்திற்கு எழுந்தருளினார். எழுந்தருளி அங்கு விளங்கும் ஒஷதிமலையின்மேல் இருந்துகொண்டு கிரமப்படி அந்த மந்த்ரத்தை ஆவ்ருத்தி செய்து வைநதேயனைப் பிரத்யக்ஷீகரித்து அவரால் ஸ்ரீஹயக்ரீவமந்த்ரத்தை உபதேசிக்கப் பெற்றார். பின்பு அந்த ஹயக்ரீவமந்த்ரத்தையும் அந்த ஸ்தலவிசேஷத்திலேயே கிரமப்படி ஆவ்ருத்தி செய்து ஸ்ரீ துரகவதனமூர்த்தியை ஸந்தோஷிக்கச் செய்து அவரைப் பிரத்யக்ஷீகரித்தார். ஸ்வாமி தேசிகனுக்கு எதிரில் ஆவிர்ப்பவித்த பன்னுகலைநால்வேதப் பொருளையெல்லாம் பரிமுகமாய் அருளிய பரமன் அவருக்கு அநுக்ரஹித்து அவரை ஸகல சாஸ்த்ரங்களிலும் பாரங்கதராகச் செய்தருளினார். இதையுத்தேசித்துத் தானே ஸ்ரீதேசிகன் அயிந்தைக்கு எழுந்தருளியிருந்தார். எனவே தாம் அங்கு வந்தருளிய காரியம் பூர்த்தியானவுடனே அவர் தமது ஊராகிய காஞ்சீபுரத்திற்குத் திரும்பி எழுந்தருளினார். அப்போது மார்க்கத்தில் பெண்ணையாற்றங்கரை

யில் ஓரிரவு தங்கி சயனித்திருந்தபோது ஸ்ரீ தேவநாதன் ஸ்ரீ தேசிகனுடைய ஸ்வப்நத்தில் தோன்றி, 'தூப்புல் பிள்ளாய்! நீர் செய்த காரியம் மிகவும் அழகியதாக இருக்கிறது! நாம் எதற்காக உமக்கு விசேஷ கடாக்ஷம் செய்து அநுக்ரஹித்தோம் என்று நினைத்திருக்கிறீர்? நீர் நம்மைத் தொழுது நம் விஷயமாக வேதங்களின் அர்த்தங்களை ப்ரதிபாதிக்குமாறு ப்ரபந்தங்களையும், ஸ்தோத்ரங்களையும் செய்ய வேண்டாமோ? உம்மால் நமது விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயம் தழைக்கவேண்டும். ஆகையால் திரும்பி அயிந்தைக்கு வாரும்' என்று நியமித்தருளினர். எம்பெருமான் நியமித்தபடியே ஸ்ரீ தேசிகன் செய்தருளினர் என்று சொல்லவேண்டுமோ? ஸ்ரீ தேவநாதன் திருவுள்ளப்படியே ஸ்ரீ தேசிகன் திருவஹீந்திரபுரத்திற்கு எழுந்தருளினர். அவருடைய ஹ்ருதடம் எம்பெருமான் தம்மிடம் காட்டிய விசேஷாநுக்ரஹத்தை எண்ணி எண்ணி இன்பக் கடலில் திளைத்துக்கொண்டிருந்தது. ஆகாசத்தில் மிகவும் உயரத்தில் பறந்துகொண்டிருக்கும் ஒரு பக்ஷியினுடைய காலில் கட்டப்பட்டிருக்கும் ஒரு கயிற்றால் அதை மெள்ளமெள்ள இழுத்து ஒருவன் அதைத் தன்னிடம் கொண்டுவருவதுபோல, தாம் தேவநாதனை விட்டு வெகுதூரம் சென்றபின்பும் அந்த எம்பெருமான் தம்முடைய அநுக்ரஹமாகிற கயிற்றினால் தம்மைத் தமக்கு அருகில் இழுத்துவந்த கருணையை நினைத்து நினைத்து நெஞ்சமுருகிப் பரவசமானர். ஸ்ரீ தேவநாதனைத் தொழுதார். அவருடைய திவ்யமங்களவிக்ரஹத்தில் திருவடிமுதல் திருவபிஷேகம் வரையில் ஒவ்வொரு திருவவயவத்தின் அழகிலும் ஈடுபட்டார். அந்த ஈடுபாடு கண்ணனுக்கேயாகுங் காமமாகப் பரிணமித்தது. காமந்தலைக்கேறிய அபலைப்பெண்களின் உணர்ச்சியும் பேச்சும் அவர் வாக்கிலிருந்து பெருக்கெடுத்தது. ஸ்ரீ தேவநாதனுடைய பெருமைகளையெல்லாம் அநுஸந்தித்தார். இந்த உணர்ச்சிகளெல்லாம் தம்மோடு நின்றுவிடாது எல்லோரும் அநுஸந்தித்து அனுபவிக்கும் வண்ணம் அவற்றை இவ்வெம்பெருமான் விஷயமாகத் தாம் அருளிச்செய்த பல்வேறு ஸ்தோத்ரங்களிலும் ப்ரபந்தங்களிலும் சித்தரித்துக் கொடுத்தார். இவ்வாறு எம்பெருமானுடைய நியமனத்தைத் தலைக்கட்டி,

'அந்தமில்சீ ரயிந்தைநகர் அமர்ந்தநாதன்
அடியிணைமே லடியுரையா லைம்பதேத்திச்
சிந்தைகவர் பிராக்ருதம் நூறுகூறிச்
செந்தமிழ்மும் மணிக்கோவை செறியச்சேர்த்துப்
பந்துகழ லம்மானையூச லேசல்
பரவுநவ மணிமாலையிவையுஞ் சொன்னேன்
முந்தைமறை மொழியவழி மொழிநீ யென்று
முகுந்தனருள் தந்தபயன் பெற்றேன் நானே'

என்று அநுஸந்தித்து அந்த எம்பெருமானுடைய திருவடி தொழுது நிற்கவும் அவரும் ஸ்ரீ தேசிகனை மிகவும் விசேஷமாக பஹுமானம் செய்தருளினர். பின்பு அந்த எம்பெருமானுடைய நியமனம் பெற்று திவ்யதேசங்களெல்லாம் சென்று ஸேவித்து வேதவேதாங்தங்களின்ஸாரமாகவும் தத்வஹிதபுருஷார்த்த ப்ரதிபாதகங்களாகவும் விளங்கும் ஏராளமான க்ரந்தங்களை அருளிச்செய்தார். இவ்வாறு இவர் அருளிய க்ரந்தங்கள் எண்ணிக்கையாலும் ப்ரபாவங்களாலும் அநந்தங்களாக இருக்கின்றன, 'பரச்சதம் வாऽபி பரஸ்ஸஹஸ்ரம் ஸ்ரீ வேங்கடாசார்யக்ருதா: ப்ரபந்தா: । தத்ராலமேக: கலு புக்திமுக்த்யோ: கார்த்ஸ்யேந கஸ்தாந் கணயேத் ஸமஸ்தாந்' ॥ (ஸ்ரீ வேங்கடாசாரியர் அருளிய ப்ரபந்தங்கள் நூற்றுக்கு மேலாகவும் ஆயிரத்திற்கு மேலாகவும் விளங்குகின்றன. அவற்றுள் ஏதாவது ஒவ்வொன்றே ஐஹிகமான போகங்களையும், ஆமுஷ்மிகமான மோக்ஷத்தையும் அடைவதற்கு உபகரிக்கப் போதுமானது. அவைகளின் ப்ரபாவங்கள் முழுவதையும் யாரால் அளவிடமுடியும்?) என்று ப்ரதிவாதிபயங்கரம் அண்ணன் தம்முடைய ஸப்ததிரத்னமாலிகையில் கொண்டாடுகிறார்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஹம்ஸஸந்தேசம்

वेदोदन्वद्विभजनविदो वंशजं विश्वमूर्तेः
आहुः सिद्धाः कमलवसतेरौपवाह्यं भवन्तम् ।
लब्धं येन प्रगुणगतिना तत्प्रियायाः सकाशात्
तत्सावर्ण्यं श्रवणरसनास्वादयोग्या सुधा च ॥

(ப-ரை) வேதோதந்வத்விபஜநவித:—ஸமுத்ரம்போன்ற வேதங்களைப் பிரித்துத் தெளிய உபதேசிப்பவரும், விச்வமூர்த்தே:— தம்முடைய அத்புத ஐச்வர்யசக்தியால் பக்ஷி ம்ருக மநுஷ்ய தேவாதிஸர்வயோநிகளிலும் அந்தந்த ப்ராணிகளின் சரீரம்போன்றதேயாகக்காணும் திவ்யமங்களவிக்ரஹங்களை ப்ரதிக்ரஹித்து லோகஸம்ரக்ஷணம் செய்யும் விச்வசரீரரூபரான, (ஆதிபகவானுடைய) வம்சஜம்— வம்சத்தில் பிறந்தவரான, பவந்தம்— உம்மை, கமலவஸதே:— பத்மாஸநரான சதுர்முகப்ரஹ்மாவின், ஔபவாஹ்யம்— ராஜவாஹனமானவர் என்று, ஸித்தா:— யோகஸித்தியால் எல்லாவற்றையும் ப்ரத்யக்ஷம்போலறியவல்லரான யோகஸித்தர்கள், ஆஹு:— கூறுவர் (கூறியுளர்.) யேந ப்ரகுணகதிநா— உத்தமமான, ருஜுவான, அறிவையுடைய எந்த உன்னாலே, தத்ப்ரியாயா: ஸகாசாத்— முன் சொன்ன அந்த ப்ரஹ்மதேவருடைய ப்ரியையான ஸரஸ்வதியிடமிருந்து, தத்ஸாவர்ண்யம்— அவன் போன்ற சுத்த வெண்வர்ணமும் சுத்த ஸ்வபாவாதிகளும், ச்ரவணரஸநாஸ்வாதயோக்யா— காதெனும் நாவினால் இன்பமாய்ப் பருகுவதற்கு யோக்யமான, ஸுதா ச— அம்ருதவாஹியும், (இன்னம் அவள் நடைபோன்ற நடையும்) லப்தம்— க்ரஹிக்கப்பட்டதோ.

(விவரணம்) 'ப்ரணயபதவீம் ப்ராப' ஸ்நேஹஸம்பந்தத்தைப் பாராட்டவானார் என்று முன் ச்லோகத்தில் ஸாதித்தது. 'ஸம்பந்தமாபாஷணபூர்வமாஹு:' என்று காளிதாஸர் 'ஸாப்தபதீநம் ஸக்யம்' என்று பாணினி- பேசத்தொடங்கி, ஸ்நேஹஸம்பந்தத்தை ஏற்படுத்திக்கொள்ளுகிறார். மேகச் சாயையில் செல்லுகிறது ஹம்ஸம் (ஹம்ஸகாவ்யம்). மாநவ தர்மசாஸ்த்ரமான மநுஸ்ம்ருதியில் ராமனுக்கு மிக்க ஆதரம்; அவர் மநுவின் வம்சத்தில் தோன்றியவர். கண்ணன் தம் கீதையில் விவஸ்வாந் (ஸூர்யன்.) மநு, இக்ஷ்வாகு ஆகிய ஜ்ஞாநகுருபரம்பரையைத் தம்மிடமிருந்து வந்த குருக்கள் குழாமாகக் கூறினார். அவர்கள் ஆதிபகவானான கண்ணனுக்குப் பிந்திய ஜ்ஞாநவம்சஸ்தர்கள். ராமாவதாரம் அவர்கள் வம்சத்தில். தம் குலப்பெரியோரென்றும் மிக்க கௌரவம் மநுவினிடமும் அவர் ஸ்ம்ருதியிலும். வாலிக்கு ஸூக்ஷ்மதர்மங்களை எடுத்துக் காட்டுகையில் மநுவினால் கீதமான ஸ்ம்ருதி ச்லோகங்களை எடுத்து உதாஹரித்தார். மாநவேந்த்ரரான மநுவினால் அயோத்திமாநகர் நிர்மாணம்செய்யப்பட்டதென்றவால்மீகி. 'தூதம் சைவ ப்ரகுர்வீத ஸர்வசாஸ்த்ரவிசாரதம்' என்று தொடங்கி மநு சில ச்லோகங்களில் ராஜதூதர்களுக்கு இருக்கவேண்டிய லக்ஷணகுணங்களைக் குறித்துள்ளார். 'ஸர்வசாஸ்த்ரவிசாரதனாய், நற்குலத்திலுதித்தவனாய், சுசியாய், அழகிய வடிவையுடையவனாய், நல்ல வாக்மியாய்' ராஜதூதன் இருக்கவேணும் என்று மநு கூறிய தூதகுணங்களை இந்த ச்லோகத்தில் அப்படியே அமைத்துள்ளது மிக ரஸ்யம். 'ஜாதம் வம்சே புவநவிதிதே புஷ்கலாவர்த்தகாநாம் ஜாநாமி த்வாம் ப்ரக்ருதிபுருஷம் காமரூபம் மகோந:' என்று காளிதாஸர் மேகத்தின் உயர்ந்த பிறப்பையும் உயர்ந்தவதிகாரத்தையும் மேகத்துடன் யக்ஷன் பேசிய முதல் ச்லோகத்தில் கூறினார். இங்கே ஸந்தே

சம் தொடங்குகிறது. மீனமாயும், ஹம்ஸ
மாகவும், வெள்ளைப்பரிமுகராயும் வேதாபஹார
ஆபத்தில் அவதரித்து ஜ்ஞாநம், வேதவாக்கு
முதலியதை உலகத்திற்கு ப்ரதாநம் செய்தவ
ரும் விசிஷ்ய தமக்கு வாக்கு ஜ்ஞாநம் முதலிய
தையெல்லாம் விசித்ரமாய் ப்ருப்ஹணம்
செய்து ஸததம் இவர் ஜிஹ்வாக்ரத்தை ஓர்
ஸிம்ஹாஸநமாய்க்கொண்டு வீற்றிருப்பவரும்
இவர் ஹ்ருத்பத்மஸிப்ஹாஸநத்திலிருந்து சப்
திப்பவருமான ஸ்ரீ லக்ஷ்மீஹயக்ரீவனை இங்கே
தொடக்கத்தில் ஸ்மரணமும், கீர்த்தனமும்
செய்யாமலிருப்பரோ? தூதராகிய ராஜஹம்ஸ
ரிடத்தில் குருபங்க்திக்கு நடுநாயகரான யதி
ராஜபரமஹம்ஸரின் நினைவுமுளது. ஆதிஹம்
ஸருடைய ஆசார்யவம்சத்தில் தோன்றியஹம்ஸ
ச்ரேஷ்டர் யதீந்த்ரர். ‹மத்ஸ்யாச்வகச்சப
ந்ருஸிப்ஹவராஹஹம்ஸ ராஜந்யவிப்ரவிபு
தேஷு க்ருதாவதார:' என்று ப்ரஹ்மாதி
தேவர்கள் கர்ப்பத்திலிருக்கும் கண்ணனைத்
துதித்து இப்பொழுதும் அவதரித்தருள
வேணுமென்று ப்ரார்த்தித்தார்கள். மத்ஸ்யம்
ஹம்ஸம், ஹயக்ரீவர் ஆகிய மூன்று மூர்த்தி
களும் முதலவதாரமூர்த்திகள். நீரக்ஷீரங்களை
ஹம்ஸம் விபஜனம் (பிரித்தல்) செய்வது ப்ர
ஸித்தம். அலைக்கும் ஸமுத்ரஜலங்களில் வேதங்
களை ஒளித்துவிட்டார்கள். தண்ணீருக்குள்
ளேயிருந்து சப்தம் வெளியில் கிளம்பித் தெரி
வது அரிது. வேதசப்தங்கள் ஜ்ஞாநஸாரம்,
ஜ்ஞாநப்பால். வேதசப்தங்களை உதந்வாந்
எனும் ஸமுத்ரஜலத்திலிருந்து பிரித்தெடுத்
தார். வேதத்தை ஸமுத்ரத்திலிருந்து பிரித்
தெடுக்கும் ஸாமர்த்யம் அவருக்குத்தானுண்டு.
ஓர் பெருங்கடலாக இருந்த வேதங்களை ஸாரா
ஸாரபிரிவினை செய்து தெளிவாக்கினர் என்
றும் பொருள். ஹயக்ரீவரூபமாக ப்ரஹ்மா
வுக்கு எல்லா வேதங்களையும் பிரித்துத் தம்மு
டைய ஹேஷாரவை: (குதிரை கனைப்புகளால்)
அத்யாபனம் செய்தார். ‹தேநே ப்ரஹ்மஹ்ரு
தோ ய ஆதிகவயே' என்று ஸ்ரீபாகவதமங்கள
ச்லோகத்திலும் ஸ்ரீ ஹயக்ரீவன் ஸ்மரணகீர்த்
தனங்கள் உள்ளன. வேதபுருஷனும் ,யோ
ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம், யோ வை
வேதாம்ச்ச ப்ரஹிணோதி தஸ்மை। தம் ஹ
தேவம் ஆத்மபுத்திப்ரகாசம் முமுக்ஷுர்வை
சரணமஹம் ப்ரபத்யே' ॥ என்று ஆதிகுருவும்
ப்ரஹ்மகுருவுமான ஸ்ரீஹயக்ரீவனிடம் சரணு
கதி அநுஷ்டாநத்தைத் தாமே செய்து உலகத்
திற்குக் காட்டினர். ‹ஆர்த்தத்ராணம் வ்ரத
மிதி வித: ஹம்ஸ சுத்தாத்மநாம் வ:' என்று
இதை மேலே முடிவிலும் ஸூசிக்கப்போகி
ருர். காளிதாஸரும் இங்கே ‹ஸந்தப்தாநாம்
த்வமஸிசரணம்' என்று மேகத்தைப்பார்த்துத்
தன் காவ்யநாயகன் வாயாலே பேசுகிருர்.
மேகத்தால் அவருக்கு ராமமேகஸ்மரணமும்
உண்டு.

வேதோதந்வத்விபஜநவித:- (1) ,யோ வை
வேதாம்ச்ச' எனவேதபுருஷன் அநுஷ்டித்துக்
காட்டிய சரணுகதிச்லோகத்திலுள்ள ‹வேதங்
களின்' நினைவோடேயே ஹம்ஸரிடம் ஸந்தே
சத்தைத் தொடங்குகிருர். மத்ஸ்யாதி மூன்
றவதாரங்களும் கூர்மம் வராஹமான மற்ற
இரண்டு முதலவதாரங்களெல்லாம் ஸமுத்ரத்
தில் செய்யப்பட்டன. (2) ஸாராஸாரங்களைப்
பிரித்து ஸாரத்தை மட்டும் தனிப்படுத்தி
எடுத்தார் ஆதிஹம்ஸர். அவருடையஸாமர்த்தி
யம்தான் அவர்வம்சத்திலுதிக்கும் ஹம்ஸஜாதி
ஸாமாந்யத்திற்கும் வந்ததோ என்று நினைக்க
லாம். வேதம் முதலிய ஸர்வசாஸ்த்ரவிசார
தரான ஆதிஹம்ஸர் குலத்தோன்றவராவீர்
நீர். ‹வம்சஜம்' வம்சமெனும் மூங்கிலில் ‹முக்
தா:' எனும் முத்துக்கள் பிறக்குமென்பர்.
அந்த வம்சத்தில் நீர் ஓர் முத்தாய்ப் பிறந்தீர்
போலும். (3) ஆதிகுருவான ஆதிஹம்ஸரான
ஆசார்யஜ்ஞாநவம்சத்தில் முக்தரைப்போன்ற
சுத்த தவளர்கள்தான் தோன்றுவர். (4)மஹா
புருஷரான பரமாத்மா ஓர் ஜந்துவாகப்
பிறப்பரோவென்ருல் அவர் எல்லா யோநிகளி
லும் தன் ஸௌலப்யத்தால் தத்ஸஜாதீயதிவ்ய
விக்ரஹங்களோடு அவதரிப்பவர். ,என்நின்ற
யோநியுமாய்ப் பிறந்தாய் இமையோர் தலைவா'
என்ற திருவிருத்தத் தொடக்கத்தையுமிங்கே
நினைக்கவேணும். உம் குலகூடஸ்தரைப்போல
ஸுலபராயும், காருணிகராயும் நீரும் உள்ள
வர். பவந்தம் கமலவஸதே: ஔபவாஹ்யம்

ஸித்தா: ஆஹு:— 'பவந்தம்' என்று ஹம்ஸத்தைப் பூஜித்துப் பேசுகிறார். ப்ராஹ்மதேவர் பகவந்நாபீகமலத்திலுதித்த பகவத்புத்ரரும் ஓர் விச்வாசார்யருமாவார். அவரும் அவர் பத்நியும் ஹம்ஸவாஹநர்கள். ராஜவாஹநத்தை 'ஔபவாஹ்யம்' என்பர். அவர்கள் வாஹநம் ஹம்ஸஜாதி. இப்படி யார் கூறினார் என்று கேள்வியை நினைத்து 'ஸித்தர்கள் கூறினார்கள்' என்கிறார். 3ம் ச்லோகத்தில் ஸீதாதேவியின் நடையைப் பின் தொடர்வது ஹம்ஸத்தின் நடை என்று இவர் மனத்திற்கு அனுபவம் வந்தது. இங்கே ஹம்ஸத்தினிடம் பேசுகையில் அப்படிக் கூறுவதிலும் ஹம்ஸத்தின் ஸ்வாமிநியான ஸரஸ்வதீதேவியினிடம் ஹம்ஸம் நடை பழகிக்கொண்டதென்று உரைப்பதே உசிதமாகும். ஹம்ஸம் ஸீதாதேவியைப் பார்த்ததில்லை. 'மென்னடைய வன்னங்காள்' என்று நம்மாழ்வார் அன்னங்களிடம் தூத்யத்தைக் கோருவது ராமன் காலத்திற்குப் பிறகு. ஆயினும் கவிக்கு அந்த நினைவும் உளதே. 'ப்ரகுணகதிரா' கதி என்பதற்கு நடையென்றும்' அறிந்துகொள்ளும் புத்திசாதுர்யம் என்றும் பொருள்கள். தங்கள் வாஹநத்திற்கும், ஸரஸ்வதி தன்னைப்போன்ற நடையைப் பழக்கிக் கொடுத்தாளோ? ச்லோகத்தில்கடைசியிலுள்ள 'ச' சப்தத்தால் நடையையும் சேர்த்துக்கொள்ளலாம். 'ப்ரகுணம் என்பதற்கு ப்ரக்ருஷ்டகுணமான என்றும்வக்ரமில்லாத அழகிய ருஜுவானது என்றும் பொருள். ருஜுவாய் ஆசார்யோபதிஷ்டத்தை க்ரஹிக்கும் ஸாமர்த்யம். வாஹநஹம்ஸஜாதிகளுக்கு நடை பழக்கிவைப்பவர். 'தத்ப்ரியாயா:' என்று 5வது வேற்றுமையாக வைத்தால் போதும். 'ஸகாசாத்' என்பது அத்தனை அவச்யமல்லவென்று தோன்றலாம். 'ஸகாசாத்' என்று ப்ரயோகித்திருப்பதில் இரண்டு ப்ரயோஜநங்களுரைக்கலாம். (1) ஆசார்யஸகாசத்திலிருந்து வேதாத்யயநம் செய்வது என்பது போல ஆசார்யஸ்வாமிநியுமான ஸரஸ்வதியின் ஸகாசத்திலிருந்து க்ரஹித்தது என்று பூஜாபுத்தியைக் குறிக்கலாம். (2) சுத்த வெண்மையான ஸரஸ்வதியோடு ஸததம் பழக்கத்தாலும் அவள் அங்கஸ்பர்சத்தாலும் அவள்வெண்ணிறம் படிந்துவிட்டதோ என்றும் கருத்து. வெண்மை வர்ணத்தைக் கற்றுக்கொள்ள முடியாது. அவளைப்போலவே ப்ரகாசிக்கும் தவள வர்ணம் ஸங்க்ரமித்துவிட்டதோ? 'தத்ஸாவர்ண்யம்' அவள் போலவேயுள்ள வர்ணம். வர்ணம் என்பது நிறத்தையும் ஸ்வபாவத்தையும் கூறும். ஹம்ஸத்வநி என்பதும் ப்ரஸித்தம். அவள் வீணை வாசிக்கையில் வீணையிலும் அவள் குரல் இனிதென்பர். அவள் வாக்கிலுதிக்கும் சப்தங்கள் காதுக்கு இனிய அமுதமாயிருக்கும். செவிக்கினிய அமுதமொழிகள். செவி அந்த அமுதத்தை இனிப்போடு பருகுகையில் நாக்கைப்போல் நக்கி இன்புறவேண்டுமென்றும், 'ரஸனை' என்னும் நாக்காக இருக்கவேணுமென்றும் நாக்கின் வ்யாபாரத்தைச் செய்ய ஆசைப்படுகிறதுபோலவும். 'த்வக்சத்ருக்ச நிபிபாஸதி' என்னும் ஆழ்வான்ச்லோகத்தையும், 'முடியானே' திருவாய்மொழியையும் நினைக்கவேணும். கண்ணன் குழலோசையைக் கேட்கும் இனிப்புரஸத்தால் ஸர்ப்பங்கள் தங்கள்உள்வாயையே நக்கின. 'ஸ்வைஸ் ஸ்ருக்விணீ லிலிஹுர்புஜங்கா:' என்ற அதிமாநுஷஸ்தவத்தையும் நினைக்கவேணும். 'ஸேவ்யோ ஸௌசாந்தஸித்தை: (பித்தை:) ச்ரவணரஸநயா ஸ்ரக்தராதுக்தராசி:' என்ற ஸாராவளி ச்லோகத்தையும் நினைக்கவேணும். ஆசார்யர்களான ஹம்ஸர்கள் மதுமத்தமமான நாக்கிலிருந்து வாகம்ருதங்கள் ப்ரவஹிக்கும். வாஹநம் போகும்போது த்வநிகளை சப்தித்துக் கொண்டே போகும். எம்பெருமானாகிய பரமஹம்ஸருடையவாக்ஸரஸ்வதியினிடம், 'ஸுதாஸாரம்' அம்ருதம் அக்ஷரம்' என்று தம்மினிப்பைப் பலவாறு அருளியிருக்கிறார். முன் தூதர் ஹநுமானைப்போல 'நாந்ருக்வேதவிநீதஸ்ய' முதலிய ச்லோகங்களால் ஸர்வவேதசாஸ்த்ரவிசாரதத்வமும் 'உச்சாரயதி கல்யாணீம் வாசம் ஹ்ருதயஹாரிணீம்' 'ஸம்ச்ரவே மதுரம் வாக்யம்' என்று இவரும் ருஷியும் புகழ்வதைப்போல இந்த ஸரஸ்வதீவாஹநதூதருக்கும் வாக்கு அமுதமாயமைந்துள்ளதாகக் கருத்து.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீ நிமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்த

மஹாவீர வைபவம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

உடனே ராமலக்ஷ்மணர்களின் குறிப்பறிந்த அனுமான் ஸந்நியாஸி உருவத்தை விட்டு வானர உருக்கொண்டு தன் முதுகின்மேல் அவர்களை ஏற்றிக்கொண்டு ஸுக்ரீவராஜனிடம் செல்கின்றான். முன்பே ராமலக்ஷ்மணர்களிடம் பயத்தினால் ருச்யமூககிரியை விட்டுப் பக்கத்திலுள்ள மலயமென்னும் சிறு குன்றில் ஒளிந்திருந்த ஸுக்ரீவனிடம் சென்று ஸ்ரீராமவ்ருத்தாந்தம் முழுவதும் கூறி, உம்மிடம் நட்புகொள்ள விரும்பி ஸ்ரீ ராமபத்ரன் உம்மைச் சரணமடைகின்றான் என்று விண்ணப்பம் செய்கின்றான். உடனே அழகிய மனித உருவத்துடன் ஸ்ரீராமபத்ரனிடம் ஸுக்ரீவன் தோன்றி, ‘ராம! உம்முடைய விக்ரமம் முதலிய குணங்களை வாயுபுத்ரன் மூலமாக நானறிந்தேன். வானரஜாதியைச் சேர்ந்த என்னுடைய நட்பை நரோத்தமனான தாங்கள் விரும்பியதால் உண்டாகும் மதிப்பும் லாபமும் எனக்கே உரித்தானது. எனது தோழமையைத் தாங்கள் விரும்புவீராகில் நட்புக்கடையாளமாக இதோ என் வலக்கரத்தை நீட்டிவிட்டேன்; தங்கள் வலக்கரத்தினால் இதைப் பிடித்துக்கொள்வீராக’ என்று கூறுகின்றான். உடனே ராமனும் ஸந்தோஷத்துடன் தன் வலக்கரத்தினால் அதைப் பிடித்துக்கொண்டார். ஹநுமான் ராமஸுக்ரீவர்களின் நடுவில் கட்டைகளால் அக்நியை மூட்டிப் புஷ்பங்களால் பூசனை செய்தான். ராமஸுக்ரீவர்கள் அவ்வக்நியை ப்ரதக்ஷிணம் செய்து தங்கள் நட்பை உறுதிப்படுத்தினர் என்று.

(கரு) ஸூர்யகுமாரனான ஸுக்ரீவமஹாராஜனிடம் ஸ்ரீ ராமபத்ரன் மைதிலியைத் தேடுவதில் தனக்குத் துணைசெய்யவேண்டி சரணமடைந்தான். இதனால் ஸர்வேச்வரனான இவனிடமுள்ள ஸ்வாதந்த்ர்யம் மறைந்தது போலாயிற்று. எப்போதும் பிறர் உதவியின்றி தன்னிச்சைப்படி தன் காரியங்களை நிறைவேற்றவல்ல குணமன்றோ ஸ்வாதந்த்ர்யம்? இன்று ஸர்வேச்வராவதாரமான ஸ்ரீ ராமபத்ரன் தன் காரியத்துக்காக ஸுக்ரீவன் உதவியை நாடியதால் அந்த ஸ்வதந்த்ர குணம் மறைந்துவிட்டது போலும்! மனுஷ்யபாவனை செய்வதாகத் திருவுள்ளம்பற்றி ‘ஆத்மாநம் மாநுஷம் மந்யே’ என்று பேசிய ஸ்ரீ ராமபத்ரனிடம் இப்படி மநுஷ்யபாவனை மேலிட்டிருப்பது உசிதமே.

दृढघटितकैलासकूटविकटदुन्दुभिकङ्कालकूटदूरविक्षेपदक्षदक्षिणेतरपादाङ्गुष्ठदरचलनविश्वस्त सुहृदाशय!

த்ருடகடிதகைலாஸகூடவிகடதுந்துபிகங்காலகூடதூரவிக்ஷேப தக்ஷதக்ஷிணேதரபாதாங்குஷ்டதரசலநவிச்வஸ்தஸுஹ்ருதாஶய!

(ப-ரை) த்ருட— கெட்டியாக கடித— இணைக்கப்பட்ட, கைலாஸகூட— கைலாஸ மலையின் சிகரங்கள் போல, விகட— விசாலமான, துந்துபிகங்காளகூட— துந்துபி என்னும் அஸுரனுடைய எலும்புக்கூட்டத்தை, தூரவிக்ஷேப— வெகு தூரத்தில் எறிவதில், தக்ஷ— ஸாமர்த்யமுள்ள, தக்ஷிணேதரபாதாங்குஷ்டதரசலந— இடதுகால் கட்டைவிரலின் சிறு அசைவினால், விச்வஸ்த— (தன் சரீரபலத்தில்) நம்பிக்கையடைந்த, ஸுஹ்ருதாஶய— நண்பனான ஸுக்ரீவனின் மநஸ்ஸை உடைய ஸ்ரீ ராமபத்ர! இங்கு அறியவேண்டிய ஸ்ரீராமாயண கதை வருமாறு:— அக்நிஸாக்ஷிகமாக ராமஸுக்ரீவர்களின் நட்பு உறுதிப்பட்டது.

பிறகு ஸுக்ரீவன், ராம! என் அண்ணன் வாலி வஞ்சனையினால் என் மனைவியை அபஹரித்துக்கொண்டிருக்கிறான். பலசாலியாய் எனக்குப் பகைவனுயிருக்கும் அவனிடம் நான் மிக்க பீதியடைந்துள்ளேன். அவனால் விரட்டப்பட்ட நான் இந்த ருச்யமூகமலைக்காட்டில் பெருந்துயருடன் வஸித்து வருகிறேன். ஸர்வலோகத்துக்கும் அபயமளிக்கும் ராம! இப்படி வாலிபயங்கொண்டு துயருற்றிருக்கும் அகதியான எனக்கும் தாங்கள் அபயமளிப்பீராக என்று முறையிடுகின்றான். இதைக்கேட்ட ஸ்ரீ ராமபத்ரன், 'உபகாரம் செய்வது நண்பனின் கடமையாகையால் உன் மனைவியை யபஹரித்த வாலியை வதம் செய்வதாக இன்றே நான் ஸங்கல்பித்து விட்டேன். மஹாவேகங்கொண்ட என் பாணங்களின் அடிபட்டுச் சிதறிய மலைபோல் கூடியசீக்கிரத்தில் விழுந்து மரிக்கப்போகும் வாலியைக் காண்பாய்' என மந்தஹாஸத்துடன் மொழிகின்றான். ஸீதையை அபஹரித்துக்கொண்டு புஷ்பகவிமானத்திலேறி ராவணன் ருச்யமூகமலைக்கு அருகில் ஆகாயமார்க்கமாகச் செல்லும்போது ஸீதைப்பிராட்டி மேல் புடவையில் முடிந்தெறிந்த திருவாபரணங்களை அப்புடவையுடன் கொண்டு வந்து ஸ்ரீ ராமபத்ரனிடம் ஸுக்ரீவன் காண்பிக்கின்றான். 'ராம! அப்போது நாங்கள் ஐவர் இம்மலையின் தாழ்வரையில் நின்றுகொண்டிருந்தோம். ஆகாயத்தில் விமானம் சென்றுகொண்டிருந்தது. ராமா, லக்ஷ்மணா என்ற ஆர்த்தஸ்வரம் எங்கள் காதில் விழும்போது இத் திருவாபரணமுடிச்சு எங்கள் முன்புறத்தில் விழுந்தது. இவற்றை நான் எடுத்து இம் மலைக்குகையில் பத்திரமாகப் பாதுகாத்து வந்தேன். ராம! இத் திருவாபரணங்களைப் பாரும்' என்று கேட்டுக்கொள்கின்றான். ஸீதையின் புடவைத் துண்டையும் திருவாபரணங்களையும் கண்ட மாத்திரத்தில் ஸீதாவிரஹதுக்கமுள்ள ஸ்ரீ ராமபத்ரனின் கண்களில் துக்கபாஷ்பம் பொங்கி எழுந்தது. ஹா! ப்ரியே! என்று அழுதவாறு கீழே சாய்ந்துகொண்டு பல தடவை அவ்வாபரணங்களை ஸ்ரீ ராமபத்ரன் தன் மார்பிலே வைத்துக்கொண்டான். இளையபெருமாளை நோக்கி, 'லக்ஷ்மணா! மைதிலி போட்ட இவ் வாபரணங்கள் பசும்புல் நிறைந்த தரையில் விழுந்ததால் எவ்விதக்கெடுதியும் நேராது அப்படியே இருப்பதைக் கூர்ந்து பார்' என்று கூறினார். உடனே லக்ஷ்மணன் ஸ்ரீ ராமபத்ரனிடம் கீழ்க்கண்டவாறு விண்ணப்பித்துக்கொள்கிறான். 'நான் ஸீதைப்பிராட்டியின் திருமுகமண்டலத்தைக் கண்டதில்லையாகையால் அவருடைய குண்டலங்களையும் கேயூரங்களையும் அறிந்திலேன். ஆனால் தினமும் அத் தேவியாரின் திருவடிகளை ஸேவித்த பழக்கத்தினால் இச் சிலம்புகள் அத்தேவியாரின் சிலம்புகளே என்று உறுதிப்பாடு கொண்டுள்ளேன்' என்று. பிறகு ஸ்ரீ ராமபத்ரன் ராவணனிருக்குமிடத்தைச் சொல்லும்படி ஸுக்ரீவனைக் கேட்கின்றார். ஸுக்ரீவனும் 'ராவணனிருப்பிடம் எனக்குத் தெரியாது. ஆனாலும் மைதிலியைத் தாங்கள் திரும்பவும் அடையும் வண்ணம் முயல்கின்றேன். சோகத்தை விடுத்து தைரியத்துடன் தாங்களிருக்க வேண்டும்' என வேண்டுகின்றான். ஸ்ரீ ராமபத்ரன் கண்ணீரை வஸ்த்ரத்தின் தலைப்பினால் துடைத்துவிட்டு 'ஸுக்ரீவ! உன்னைப்போன்ற நண்பன் கிடைத்தற்கரியன், நீ ஸீதையைத் தேட முயல்வாயென நம்புகின்றேன். உன் விஷயத்தில் நான் செய்வதாகச்சொன்ன யாவுமுண்மையேயென நம்பு. நான் முன்பும் பொய் பேசியதில்லை; வருங்காலத்திலும் பேசமாட்டேன். இது ஸத்தியம்' எனக் கூறுகின்றார். பிறகு ஸுக்ரீவன் ஸ்ரீ ராமன் கட்டளை

யின் மேல் வாலியுடன் தனக்கு நேரிட்ட விரோதகாரணத்தை விளக்குகின்ருன். ராம. நாங்கள் பரம்பரையாகவே வானர ராஜ்யத்தை ஆண்டு வருகிறோம். என் தகப்பனுக்குப் பிறகு என் மூத்தவனான வாலி வானரராஜபதவியை யேற்றுக்கொண்டான். நானும் அவனிடம் தாஸன்போல எப்போதும் வணக்கத்துடன் நடந்து வந்தேன். துந்துபி என்னும் அஸுரனின் மூத்த மகனான மாயாவிக்கும் என் அண்ணனுக்கும் ஏதோ ஒரு பெண் நிமித்தமாய் நெடுங்காலமாகவே பகையேற்பட்டிருந்தது. ஒரு ஸமயம் நடு நிசியில் கிஷ்கிந்தையின் வாயிற்புறத்தில் அம் மாயாவியென்பான் வந்து நின்று பேரிரைச்சலிட்டு வாலியை யுத்தம் செய்ய அழைத்தான். கடுஞ்சினமுற்ற வாலி, மண்டியிட்டுப் பெண்டிரும் நானும் செய்த வேண்டுகோளைக் கேளாமல் யுத்தம் செய்யப் புறப்பட்டான். என் அண்ணனிடம் அன்பினால் நானும் உடனே உதவிக்காகப் புறப்பட்டேன். அம் மாயாவி வெகு தூரத்தில் நானிருப்பதையும் என் அண்ணன் போரிட வருவதையும் கண்டு பயத்தினால் ஓட ஆரம்பித்தான். அவனைத் துரத்திச்சென்ற எங்களுக்கு அப்போதே உதிக்கின்ற சந்திரனும் வெளிச்சமளித்துத் துணை புரிந்தான். உடனே மாயாவி புல்லடர்ந்தும் நுழையவொண்ணததுமான ஓர் பெரிய பிலத்தில் வேகமாக நுழைந்துவிட்டான். அப் பிலத்தின் ஸமீபம் சென்றதும் வாலி, 'ஸுக்ரீவா! நான் இந்த பிலத்துக்குள் நுழைந்து அஸுரனைக் கொன்று வரும் வரையில் நீ இங்கேயே பிலத்தின் முன் புறத்தில் ஜாக்கிரதையாயிரு' என்று கூறி, 'என் கால்களாணையாக நான் உன்னைத் தொடர்ந்து வருவதில்லை' என்ற சபதவாக்யத்தைக் கூறும்படி என்னைச் செய்துவிட்டு பிலத்தினுள் நுழைந்து போனான். அவன் சென்று ஒரு வருஷ காலமாயிற்று. ஆயினும் அவன் திரும்பி வாராததால் நான் மிக்க கவலைகொண்டேன். வெகு காலத்திற்குப் பிறகு அந்த பிலத்தின் வாயிலாக நுரையுடன் ரத்தவெள்ளம் வெளி வருவதைக்கண்டேன். என் அண்ணனுக்கு ஆபத்து நேர்ந்ததோ என எண்ணி வருத்தமும் அடைந்தேன். அதற்கு அநுகுணமாக அஸுரர்களின் பேரிரைச்சலைக் கேட்ட என்னுடைய காதுகளில் யுத்தத்திலீடுபட்ட என் அண்ணனின் குரல் கேட்கவில்லை. இதனால் என் அண்ணன் இறந்துவிட்டதாக எண்ணிய யான் அஸுரன் திரும்பி வாராமலிருப்பதற்காக மலை போன்ற பெரும் பாறையினால் பிலத்தை மூடிவிட்டு வருத்தத்துடன் கிஷ்கிந்தை வந்து சேர்ந்தேன். அங்கு மந்திரிகள் என்னை வானரராஜபதவியில் அமர்த்தினார்கள். பிறகு வாலி அஸுரனைக் கொன்று ஜயம் பெற்று கிஷ்கிந்தை வந்தான். நான் ராஜ்யத்தை ஏற்று நடத்துவதைக் கண்டு கடுங்கோபம் கொண்டான். என் மந்திரிகளைச் சிறையிலிட்டான். என்னை மிகவும் பழித்துப் பேசினான். அவன் திருவடிகளை முறைப்படி நான் ஸேவித்தும் என்னை அவன் ஆசீர்வதிக்கவில்லை. மறுபடியும் நான் வணங்கி, 'பிலத்வாரத்தில் ஒரு வருஷம் நான் காத்திருந்தேன்; வெளியில் குருதிவெள்ளம் வந்ததைக் கண்டு நீ அடிபட்டிறந்ததாக எண்ணி பிலத்தை மூடிக் கிஷ்கிந்தை திரும்பினேன். கிஷ்கிந்தையிலுள்ள வானரவீரர்களின் வேண்டுகோளுக்கிணங்கியே ராஜ்யத்தை ஏற்றேன். நான் ஆசைப்பட்டு ராஜபதவி யேற்கவில்லையாகையால் நீரே மறுபடியும் இந்த ராஜ்யபாரத்தை ஏற்று நடத்தவேண்டுமென அஞ்சலி செய்து வேண்டினேன். இவ்வளவு அன்புடன் நான் கூறியும் அவன் என்னை மிகவும் துச்சமாகப் பற்பல பழித்துச் சொல்லி மந்திரிகள் முதலானோர் மத்தியிலும் கடுமை

யாகப் பேசி ஒரு வஸ்த்ரத்துடன் என்னை விரட்டிவிட்டான். என் மனைவியையும் எடுத்துக்கொண்டான். அவனிடம் பயந்த நான் பாதுகாப்புக்காக அவனியெல்லாமலைந்து கடைசியிலிந்த ரிச்யமூகமலையை யடைந்தேன். இது தான் எனக்கும் வாலிக்கும் ஏற்பட்ட விரோதவிருத்தாந்தமென்று ஸுக்ரீவன் விண்ணப்பித்தான். இதைக்கேட்ட ஸ்ரீ ராமபத்ரனும் 'ஸுக்ரீவா! நீயும் என்னைப்போல் துயரக்கடலில் அழுந்துகின்றாய். உன் மனைவியையபஹரித்த வாலி என் கண்களிற்பட்டவுடன் கூரான என் பாணங்கள் உறுதியாக அவன் மேல் விழுந்து அவனைக் கொல்லப்போகின்றன. பிறகு நீ பூர்ணகாமனாவாய்' எனத் தேறுதல் கூறுகின்றார். இதனால் மகிழ்ச்சி கொண்ட ஸுக்ரீவன் சொல்லுகின்றான்:— ராமா! கோபங்கொண்ட தாங்கள் பிரளயகால ஸூரியன்போல தஹிக்கும் வல்லமை கொண்டவர் தான். ஆயினும் அவ்வாலியின் பலம், வீர்யம், தைர்யம் இவைகளின் தன்மையை நான் கூறுகின்றேன். அதன் பிறகு தாங்கள் உசிதமாக நடந்துகொள்ளுங்கள். ஸூரியனுதிப்பதற்கு முன்பே மேற்கு ஸமுத்திரத்திலிருந்து கிழக்கு ஸமுத்திரத்திற்கும், தென் கடலிலிருந்து வடகடலுக்கும் வாலி சென்று ஸ்நானபூர்வமாக ஸந்தியாவந்தனம் செய்வான். மலைகளின் மேலுச்சியிலேறி கொடுமுடிகளைப் பந்துபோலெறிந்து பிடித்துக்கொள்வான். இப்படியிருக்கும்போது துந்துபி என்னுமஸுரன் வரதானத்தினால் வீர்யச்செருக்குள்ளவனாய் எருமைக்கிடா உருக்கொண்டு ஸமுத்ரராஜனைச் சண்டை செய்ய அழைத்தான். ஸமுத்ரராஜன் தான் சண்டையிடத் திறமையற்றவன் எனக்கூறி பர்வதராஜனான ஹிமவானிடம் சென்று சண்டையிடும்படி துந்துபியை யனுப்பிவிட்டான். துந்துபி உடனே ஹிமவானிடம் சென்று அம்மலையின் பாறைகளைப் பிடுங்கி பலவாறு பூமியில் எறிந்து கர்ஜனையிட்டான். ஹிமவான் அன்பு செலுத்தவேண்டிய உருவத்துடன் தன் சிகரத்தின் மேல் தோன்றி 'துந்துபி! சாந்தகுணமுள்ள முனிவர்களின் இருப்பிடமான நான் யுத்தம் செய்யும் திறமையற்றவன். ஆகையால் என்னை வருத்துவது உனக்கு தருமமன்று' என்று சொன்னான். 'அப்படியானால் என்னுடன் போரிடவல்ல புருஷனைக் கூறு' என துந்துபி ஹிமவானைக் கேட்டான். 'கிஷ்கிந்தையிலுள்ள வாலியே உனக்குச் சமமாக யுத்தஞ்செய்ய வல்லவன். விருப்பமிருந்தால் சீக்கிரம் அவனிருப்பிடம் செல் என' ஹிமவான் பதில் கூறினான். உடனே துந்துபி கிஷ்கிந்தை வந்து கடுங்கோபத்துடன் வாலியுடன் போர் புரிந்தான். மஹேந்திரன் கொடுத்த காஞ்சனமாலையைக் கழுத்திலணிந்து யுத்தம் செய்த வாலி கொம்புகளைப் பிடித்து துந்துபியின் உடலைப் பிளந்து முடிவில் தரையில் எறிந்துவிட்டான். கீழே விழுந்தவுடன் துந்துபி மரித்து விட்டான். பலசாலியான வாலி இரு கைகளாலும் துந்துபியின் பிணத்தைத் தூக்கி வேகமாக ஒரு யோஜனை தூரத்தில் விழும்படி எறிந்தான். இப்படி எறிந்த பிணத்தின் வாயிலிருந்து கிளம்பிய ரத்தத்துளிகள் காற்று மூலமாய் இங்குள்ள மதங்காச்ரமத்தில் வந்து விழுந்தன. இதனால் கோபமுற்ற மதங்க முனிவர் 'தன் ஆசிரமத்தை ரத்தத்தினால் அசுத்தம் செய்தவன் இவ்வனம் வந்தால் மரணமடைவான்' எனச் சாபமிட்டார். இதையறிந்த வாலி ருச்யமூகமலைக்குள் நுழைய விரும்புவதில்லை. இதைக் கேள்வியுற்ற நானும்மந்திரிகளுடன் இங்கு வந்து பயமற்று ஸஞ்சரிக்கின்றேன்.

(தொடரும்)

ஸ்ரீ:

ராமானுஜனை யநுபவிக்கும் ராமானுஜன்

ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் யதிராஜ ஸப்ததியில்

‘वन्दे तं यमिनां धुरन्धरमहं मानान्धकारद्रुहा
पन्थानं परिपन्थिनां निजदृशा रुन्धान पिन्धानया।
दत्तं येन दयासुधांबुनिधिना पीत्वा विशुद्धं पयः
काले नः करिशैलकृष्ण जलदः कांक्षाधिकं वर्षति ॥

எந்த தயாம்ருத ஸமுத்ரமான பாஷ்யகாரராலே சுத்தமானதாகக் கொடுக்கப்பட்ட தீர்த்தத்தை ஸ்வீகரித்து ஹஸ்திசைலத்தில் இருக்கும் க்ருஷ்ணமேகமானது (அதாவது வரதன்) (க்ருஷ்ணன் என்னும் மேகம்) ஸரியான ஸமயத்தில் நமக்கு அபேக்ஷிதாதிகமாக வருஷிக்கிறதோ, அஹங்காரத்தைப்போக்கக்கூடியதாயும் ப்ரகாசிக்கக் கூடியதாயுமான தன் கடாக்ஷத்தால் சத்ருக்களின் வழியை அடக்குகிறவரான அப்பேர்ப்பட்ட யதிராஜனை வணங்குகின்றேன் என்று ஸ்ரீ பாஷ்யகாரர் காஞ்சியில் சாலக் கிணற்றிலிருந்து வரதனுக்குத் தீர்த்த கைங்கர்யம் செய்துகொண்டிருந்ததை வர்ணிக்கிறார். ஸாதாரணமான மேகம் உப்பு ஸமுத்ரத்தில் இருக்கும் ஜலத்தைத் தானே எடுத்து சுத்தி செய்து பிறகு நமக்கு வர்ஷிக்கிறது. அதையும் காலத்திலும், பூர்ணமாகவும் வர்ஷிக்காது. சுத்தி செய்வதால் ஜலமும் குறைந்துவிடும். அதிலும் தான் ஜலமெடுத்து வந்த ஸமுத்ரத்திலேயே பாதியை வர்ஷித்து பிறகு மலைகளிலும் வர்ஷித்து நமக்கு வர்ஷிக்கும்பொழுது பற்றாக்குறையாக வர்ஷிக்கும்' இங்கு வரதன் என்ற கருமேகமோவெனில் தன் ஹஸ்திகிரியில் (மலைமேலேயே) இருந்தபடியே ஸமுத்ரத்திற்குச் சென்று ஜலம் எடுக்காமல் வர்ஷிக்கிறது. ஸமுத்ரமே தானாக இந்த மேகத்தைத் தேடிவந்து ஜலத்தைக் கொடுக்கிறது. அதிலும் உப்பு ஸமுத்ரமல்ல. அம்ருத ஸமுத்ரம், அதிலும் பாஷ்யகாரர் என்கிற தயாக்ஷீரஸமுத்ரமல்லவா தானாக உகந்து கொணர்ந்து கொடுக்கிறது, அம்ருத ஸமுத்ரமானதால் மறுபடி சுத்தி செய்யவேண்டிய அவசியமில்லை. ‘विशुद्धं पयः’ என்றிருப்பதால் சுத்தமான பயஸ்ஸைக் கொடுக்கிறது. பயஸ் என்றால் பால், தீர்த்தம் என்ற பொருள்களுண்டு. பாலாகக் கொடுப்பதால் நாம் விரும்பியதைக்காட்டிலும் தயிர், நெய், வெண்ணெய் ரூபமாகவும் பஹுமுகமாக வர்ஷிக்கிறது. ஆகையாலேயே வரதன் என்று பெயர். மற்ற எம்பெருமான்களுக்கு வரதன் என்று பெயர் கிடையாது. தேவாதிராஜனே ப்ரதிப்ரயோஜனத்தை எதிர்பார்க்காமல் அபீஷ்டத்தைக் கொடுப்பதாலும், பாஷ்யகாரராலே ஸமர்ப்பிக்கப்படும் தீர்த்தத்தை ஸ்வீகரித்து வர்ஷிப்பதாலும் இந்த எம்பெருமானுக்கே வரதன் அபீஷ்டத்தை அளிப்பவன் என்று திருநாமம். வரதன் என்னும் மேகத்திற்கு உப்பு ஸமுத்ர தீர்த்தம் கூடாது. ஆகையாலேயே தேசிகன் எம்பெருமானாரை க்ஷீரஸமுத்ரமாக வர்ணிக்கிறார். தேசிகனும் ‘கடல்களேழில் கமலைபிறந்து அவனுகந்த கடலேபோல’ என்று அம்ருதாஸ்வாதினியில் அனுபவிக்குமாப்போலே க்ஷீர ஸமுத்ரம்பகவானுக்குஉகப்பானது. ச்ருதியும் தைத்திரீயப்ராஹ்மணத்தில் இரண்டாவது அஷ்டகத்தில் ‘इदं वा अग्रे नैव किंच नासीत्’ என்ற அநுவாகத்தில் முன்பு ப்ரளயகாலத்தில் ஒன்றுமில்லாதபொழுது பகவான் ஸ்ருஷ்டிக்காக தபஸ் செய்ய ஆரம்பித்தார். அப்பொழுது ‘तस्मात्तेपानाद्धूमोजायत, तद्भूयो तप्यत, तस्मात्तेपानादग्निरजायत’ இன்னும் க்ரமமாக ज्योतिरजायत, अर्चिरजायत, मरीचयोऽजायन्त, उदारा अजायन्त என்று, ஸ்ருஷ்டிக்காக தபஸ் செய்யும் ப்ரஹ்மத்தின் அபான பாகத்திலிருந்து புகை, ஜ்யோதிஸ், அர்ச்சிஸ், கிரணங்கள், கடினமான தேஜஸ்ஸுகள் (எலக்ட்ரிக் தேஜஸ்) முதலியவைகள் உண்டாகி, ‘तदभ्रमिव समनह्यत’ இவைகள் ஒன்றுசேர்ந்து மேகமாக பரிணமித்தது என்று வருணிக்கிறது. ஆகையால்தான் காளிதாஸனும் ‘धूमज्योतिस्सलिल मरुतां सन्निपातः क्व मेघः’ என்று வருணிக்கிறார். பிறகு ‘तद्वस्ति मभिनत्। स समुद्रोऽभवत्। तस्मात्समुद्रस्य न पिबन्ति। प्रजननमिव हि मन्यन्ते। तस्मात्पशोर्जायमानादापः पुरस्तांद्यन्ति’ ஆம் மேகம் பரப்ரஹ்மத்துக்கு மூத்ராசய ஸ்தானமாக ஆகி

பிறகு அது உடைந்தது. பிறகு அதிலிருந்து வந்த ஜலமே ஸமுத்ரமாக பரிணமித்தது. ஸ்ருஷ்டிக்கு முன்பு அந்த ஜலம் வந்தபடியால் அது ப்ரஸவத்திற்கு முன்பு கர்ப்பாசயத்தி லிருந்து வரும் ஜலம்மாதிரி. ஆகையால்தான் லோகத்திலும் ஒரு ஜீவன் ப்ரஸவிப்பதற்கு முன்பு கர்ப்பாசயத்திலிருந்து ஜலம் வெளி வருகிறது. அப்பேர்ப்பட்ட கர்ப்பாசயஜலம் மாதிரி ஸமுத்ரமானபடியால் ஸமுத்ரஜலத் தைப் பானம் செய்வதில்லை என்று வேதம் கூறுகிறது. ஆகையால்தான் பசுவானுக்கும் உப்புஸமுத்ரஜலம் கூடாது. ஆகையால்தான் இந்த வரதன் என்னும் கரிஸைல க்ருஷ்ண மேகத்திற்குத் தீர்த்தத்தை யளிப்பது பாஷ்ய காரர் என்னும் ஓர் க்ஷீர (பால்) ஸமுத்ரமென் பது ஸ்வாமி தேசிகன் அருளிய ஸ்ரீஸூக்தி. இந்த ஜலமும் சுத்தமானது. பாஷ்யகாரரும் இந்த தீர்த்த கைங்கர்யத்தை தானே உகந்து செய்கிறார். இது உடையவருக்கு ஜன்மாந்தரத் திலிருந்து தொடர்ந்து வந்த கைங்கர்யம். ஸ்ரீபாஷ்யகாரரும் ஆதிசேஷனின் அவதார மல்லவா. முன்பு பகவான் ராமனாக அவ தரித்தபொழுது ஆதிசேஷன் தம்பி லக்ஷ்மண னாக அவதரித்து இந்த தீர்த்தகைங்கர்யத்தை அப்பொழுதும் தானே உகந்து செய்துவந் தார். இதை சித்ரகூடத்திலிருந்து ராமனை திரும்பி அழைத்துவர எல்லோரும் சென்ற பொழுது கௌஸல்யை சுமித்ரையைப் பார்த் துச் சொல்லுகிறாள்:—

'इतस्सुमित्रे पुत्रस्ते सदा जलमतन्द्रितः।
स्वयं हरति सौमित्रिर्मम पुत्रस्य कारणात्॥
जघन्यमपि ते पुत्रः कृतवान्न तु गर्हितः।
भ्रातुर्यदर्थसहितं सर्वं तद्विहितं गुणैः॥
अन्यायमपि ते पुत्रः क्लेशानामतथोचितः।
नीचानर्थसमाचारं सज्जङ्कर्म प्रमुंचतु॥' என்று.

[ஹே சுமித்ரே! இந்த இடத்திலிருந்து தான் உன் புத்ரனான லக்ஷ்மணன், என் புத்ர னான ராமனின் பொருட்டு நித்யம் சோம்ப லில்லாமல் தானாகவே உகந்து தீர்த்தம் எடுத் துச் செல்லுகிறான். जघन्यमपि ते पुत्रः என்ப தால் ஒருவருக்கு ஜலம் கொண்டு போய் கொடுப்பது என்பது மஹா நீசமான தொழில் அப்படியிருந்தும் தமைய னுக்குச் செய்யவேண்டியது அவசியம். பித்ரு சிச்ரூஷைக்கு ஸமானமென்றும், सर्वं तद्विहितं गुणैः என்று இதுவும் குணக்ருதமென் றும்தானே உகந்து லக்ஷ்மணன் செய்கிறார். இனிமேலாவது லக்ஷ்மணன் இந்த நீசமான தொழிலை விட்டுவிடவேண்டும்] மென்று கௌ ஸல்யைசொல்லுகிறாள். முன் அவதாரத்தில் லக்ஷ்மணனாக இருந்து செய்த தீர்த்தகைங்கர் யத்தை கவிஸார்வபௌமரான வால்மீகி வெளி யிட்டபடியை யநுஸரித்து கவிதார்க்கிகஸிம்ஹ மான ஸ்வாமி தேசிகன், இப்பொழுது லக்ஷ் மணமுநியாக (உடையவராக) இருந்துகொண்டு செய்த தீர்த்த கைங்கர்யத்தை கீழ்ச்சொன்ன ச்லோகத்தால் அநுபவிக்கிறார். ஸ்வாமி தேசி கனின் அநுபவபரீவாஹமே மஹா ஆச்சர்ய கரமானது. இதேமாதிரியே 'कुदृष्टिकुहनामुखे निपततः परब्रह्मणः करग्रहविचक्षणो जयति लक्ष्मणोऽयंमुनिः' குத்ருஷ்டிகளான பாஹ்ய மதஸ்தர்க ளின் வஞ்சனைவலையில் விழும் பரப்ரஹ்மத் தைக் கைகொடுத்துத் தூக்கிவிடுவதில் ஸமர்த் தரான லக்ஷ்மணமுநியானவர் விளங்குகிறார் என்று அநுபவிக்கிறார். இப்படி பாஹ்யமதஸ் தர்களின் வஞ்சனையிலிருந்து பரப்ரஹ்மத் தைக் காப்பாற்றுவதும், முன்பு ராமாவதா ரத்தில் தான் லக்ஷ்மணனாக இருந்து பரப்ரஹ் மத்தைக் காப்பாற்றிய அநுபவப்படியேராமா யணத்திலும் 'तथैव रामोऽश्रुमुखः कृतांजलिः स्थितोऽभवल्लक्ष्मणबाहुपालितः' என்று ராமனும் லக்ஷ்மணனுடைய கையால் காப்பாற்றப்பட்ட வராகவே வர்ணிக்கப்படுகிறது.

(தொடரும்)

ஸ்ரீ:

பஞ்சாங்கஸங்க்ரஹம்

[துர்முகி ஸூ தக்ஷிணாயனம் ஹேமந்த ருது - சாபமீ
1956 டிஸம்பர் மீ - **1957** ஜனவரி மீ]

15-12-56	மார்கழிமீ 1உ	சனிக்கிழமை	சாபரவி 18-37; ஷடசீதி; ஸங்க்ரமண தர்ப்பணம்; வ்ருச்சிக - சாப சுக்ல த்ரயோதசிதிதி; திருப்பள்ளியெழுச்சி.
17-12-56	3உ	திங்கட்கிழமை	○பூர்ணிமை; மிருகசீர்ஷம்; **16**-வது பட்டம் ஸ்ரீ சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
22-12-56	8உ	சனிக்கிழமை	பஞ்சமி - ஷஷ்டி திதித்வயம்.
26-12-56	12உ	புதன்கிழமை	சித்திரை; **4**-வது பட்டம் ஸ்ரீநிவாஸயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
28-12-56	14உ	வெள்ளிக்கிழமை	ஏகாதசிவ்ரதம்; விசாகம்; **30**-வது பட்டம் ஸ்ரீநிவாஸவேதாந்தயதீந்த்ரமஹாதேசிகன்; **40**வது பட்டம் ஸ்ரீ ரங்கநாதசடகோபயதீந்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
30-12-56	16உ	ஞாயிற்றுக்கிழமை	கேட்டை, தொண்டரடிப்பொடியாழ்வார்; பெரிய நம்பிகள் திருநக்ஷத்ரம்.
31-12-56	17உ	திங்கட்கிழமை	● அமாவாஸ்யை.
4-1-57	21உ	வெள்ளிக்கிழமை	அதிதி.
5-1-57	22உ	சனிக்கிழமை	சதுர்த்தி திதி.
7-1-57	24உ	திங்கட்கிழமை	**41**-வது பட்டம் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்;
10-1-57	27உ	வெள்ளிக்கிழமை	கூடாரவல்லி;
12-1-57	29உ	சனிக்கிழமை	ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி;
13-1-57	30உ	ஞாயிற்றுக்கிழமை	மகர ரவி 39-30; சாப சுக்ல த்வாதசி திதி; போகிப்பண்டிகை.

[உத்தராயணம் - ஹேமந்த ருது - மகர மீ]

14-1-57	1உ	திங்கட்கிழமை	உத்தராயண புண்யகாலம்; ஸங்க்ரமண தர்ப்பணம்; மகர சுக்ல த்ரயோதசி திதி, ஸங்க்ராந்தி பண்டிகை.
15-1-57	2உ	செவ்வாய்க்கிழமை	சதுர்தசி ○பூர்ணிமை திதித்வயம்; கனு.
18-1-57	5உ	வெள்ளிக்கிழமை	மகம்; திருமழிசையாழ்வார் திருநக்ஷத்ரம்.
21-1-57	8உ	திங்கட்கிழமை	ஹஸ்தம்; கூரத்தாழ்வான் திருநக்ஷத்ரம்.
22-1-57	9உ	செவ்வாய்க்கிழமை	சித்திரை; **15**-வது பட்டம் ஸ்ரீ கல்யாணவீரராகவ யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
26-1-57	13உ	சனிக்கிழமை	ஏகாதசி.
30-1-57	17உ	புதன்கிழமை	●அமாவாஸ்யை. உத்திராடம்; **42**-வது பட்டம் ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோப யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
31-1-57	18உ	வியாழக்கிழமை	திருவோணம்; **3**-வது பட்டம் ஸ்ரீ பராங்குசயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.

Regd. No. M. 4437.

ஸ்ரீ:

1957-ம் வருஷத்திய

புதுமாதிரி காலண்டர்

இதன் விலை அணா 6.

கிடைக்குமிடம்:— ஸ்ரீ மாலோல பிரஸ், **30**, பனகல் தெரு, திருவள்ளூர், செங்கல்பட்டு ஜில்லா.

இதில் ஸநாதனிகள் அனுஷ்டிக்கும் முக்கிய வ்ரதங்கள், அரசாங்க விடுமுறை தினங்கள், ஹிந்துக்களின் பண்டிகைகள், ஆழ்வார், ஆசார்யர்களின் திருநக்ஷத்திரங்கள், ஸ்ரீ அழகியசிங்கர்கள் திருநக்ஷத்திரங்கள் முதலிய முக்கியமான விஷயங்கள் குறிப்பில் உள்ளன. அரசாங்க காலண்டர்படி சைத்ரம் முதலிய மாதங்களும் பிரசுரிக்கப் பட்டுள்ளது.

N. B. மேலே குறிப்பிட்ட காலண்டர் **1957**-வது வருஷம் ஜனவரி மாதம் **10** தேதியில் வெளிவரும்.

மானேஜர்.

In case of non delivery please return to:

"SRI NRISIMHA PRIYA"

Sri Ahobila Mutt, Tiruvallur.

To BOOK POST

Sri S. ரங்கநாதாசாரியர்
ரிடையர்ட் அஸிஸ்டெண்ட்
இஞ்சினியர்.

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam, Sri Ahobilamutt at Sri Malola Press, 30. Panagal Street, Tiruvallur. Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T. Sri Ahobilamutt Sanskrit College, Madurantakam.